அரிச்சந்திரன் கும்மி

அனுமந்தராயன்

சென்னைப் பல்கலைக் கழகம்
தமிழ் இலக்கியத் துறை
சுவடியியல் மற்றும் பதிப்பியில் பட்டயத்திற்காக
அளிக்கப்பட்ட ஆய்வேடு.

பதிப்பு

இரெ. மிதிலா

தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூலை 2004

அரிச்சந்திரன் கும்மி

அனுமந்தராயன்

சென்னைப் பல்கலைக் கழகம்
தமிழ் இலக்கியத் துறை
சுவடியியல் மற்றும் பதிப்பியில் பட்டயத்திற்காக
அளிக்கப்பட்ட ஆய்வேடு.

பதிப்பு

இரெ. மிதிலா

தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூலை 2004

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயத்திற்காக அளிக்கப்பட்ட
வரிசை எண் :

இரெ. மிதிலா
ஆய்வாளர்
சுவடியியல் மற்றும் பதிப்பியல்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

ஆய்வாளர் உறுதிமொழி

2003- 2004 ஆம் ஆண்டிற்கான சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காக அனுமந்தராயன் என்பவரால் இயற்றப்பட்ட "**அரிச்சந்திரன் கும்மி**" என்ற பெயரில் செய்யப் பெற்றுள்ள இந்த ஆய்வு எந்தப் பட்டயத்திற்கோ ஆய்வரங்கிற்கோ அனுப்பப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை **(இரெ. மிதிலா)**
நாள் : ஆய்வாளர்

வீ. அரசு
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

2003 - 2004 ஆம் ஆண்டிற்கான சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காக **இரெ. மிதிலா** அவர்களால் **'அரிச்சந்திரன் கும்மி'** என்னும் தலைப்பில் செய்யப் பெற்ற இந்தப் பதிப்பு அவரது சொந்த முயற்சியில் உருவானதாகும். மேலும் இந்த ஆய்வு வேறு எந்தப் பட்டயத்திற்கோ ஆய்வரங்கிற்கோ அனுப்பப்படவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

இடம் : சென்னை - 5
நாள் : .2004

(வீ. அரசு)
மேற்பார்வையாளர்

பொருளடக்கம்

முன்னுரை 11

பதிப்புரை 18

அரிச்சந்திரன் கும்மி 25

பின்னிணைப்பு

(i) கும்மிப்பாடல் வகைப்பாடு 79

(ii) அரிச்சந்திரன் கும்மி - முக்கியக் கதாபாத்திரங்கள் 81

(iii) அரிச்சந்திரன் கதைச் சுருக்கம் 82

(iv) துணைநூற்பட்டியல் 87

நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் ப்டிப்பில் சேர்வதற்கு வாய்ப்பளித்து, நெறிப்படுத்தி உதவும் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் **வீ. அரசு** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவிக்கக் கடப்பாடுடையேன்.

பதிப்பின்போது ஏற்பட்ட ஐயங்களைக் கேட்டறிந்து அவற்றைக் களைய உதவிய பேராசிரியர் **ய. மணிகண்டன்** அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பட்டயப் படிப்பின் ஒரு பகுதியாகிய சுவடிப் பதிப்பிற்காகத் தாள்சுவடியைப் பார்ப்பதற்கும் ஒளிநகல் எடுப்பதற்கும் உதவிய சென்னைப் பல்கலைக்கழக அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாளருக்கும் பிற ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

என்னுடைய செயல்களிலெல்லாம் உறுதுணையாய் இருந்து தோள்கொடுக்கின்ற என் அருமைத் தோழி **இ. நந்தமிழ்நங்கைக்கும்** எந்நேரமும் தேவைப்படுகின்ற நூல்களை உடனே தந்துதவும் நண்பர் **சு. இரமேஷ்** அவர்களுக்கும் நன்றி கூற வேண்டுமெனில், சொற்களுக்குப் பஞ்சமே.

இப்பதிப்பினை அழகான நூல் வடிவில் வடிவமைத்து, முழுமை பெற உதவிய **'அன்றில் ஒளி அச்சகத்தாருக்கும்'** எனது உளமார்ந்த நன்றி.

முன்னுரை

பெண்கள் பலர்கூடி இன்பப்பெருக்கில் கைகொட்டிக் களித்துப் பல பொருள் பற்றி வரும் கதைப்பாடல்ளைச் சமய, சமூக விழாக்களில் சுவையுடன் பாடிக் கலைச் சிறப்புடன் ஆடுவது கும்மி. இதனைக் கும்மியடித்தல், கொம்மி கொட்டுதல், கொப்பி கொட்டுதல் என்று வெவ்வேறு முறையில் கூறுவர்.

கும்மி - சொற்பொருள் விளக்கம்

"கும்முதல்" என்பதற்கு 'கைகொட்டுதல்' என்பது பொருள் "கும்மாளம் போடுதல்" என்பது 'குதித்தாடுதல்' என்ற பொருளில் இன்றும் நாட்டுப்புறங்களில் வழங்கி வருகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு கை கொட்டி ஆடுவதைக் 'கும்மி' என்று அழைத்திருக்கலாம்.

'குழுமி' என்ற சொல்லில் இருந்து 'கும்மி' என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும் என்பர் அ.கி.பரந்தாமனார். பெண்கள் கூடி ஆடுவதால் இப் பெயர் பெற்றிருக்கலாம்.

'கும்மு' என்ற சொல் சாந்துக்கு உரிய கலவைப் பொருள்களைச் சேர்த்து இடித்தல் என்ற பொருளிலும் 'குமுக்கு' என்பது துணியை நனைத்துக் கைகளால்

பிடித்துத் தப்புதல் என்ற பொருளிலும் வருவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய செயல்களில் ஒருவிதத் தாள ஒழுங்குடைய ஒலி எழுவதைக் காணலாம். ‘கொம்’ என்பது ஓர் ஒலிக்குறிப்புச் சொல்லாகும். அது திராவிட மொழிகளில் காணப்படுகிறது. அதிலிருந்து குமு, கும்மு, கும்மி ஆகியவை தோன்றியிருக்கலாம். கை குவித்து அடித்துப் பாடி மகிழும் ஆட்டமே கும்மி என வழங்கப்படுகிறது.

கும்மியைக் குறிக்கும் பிற சொற்கள்

‘கொம்மை’ என்ற சொல் கைகளைக் குவித்துக் கொட்டல் என்ற பொருளில் பழமொழியிலும் சீவக சிந்தாமணியிலும் நைடதத்திலும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அகநானூறு ‘கொப்பி’ என்று கும்மியைக் குறிப்பிடு கின்றது. ஆந்திரத்திலும் தமிழகத்தில் உள்ள செட்டி நாட்டிலும் இப்பெரியனைக் காணலாம்.

இதனைக் ‘கொம்மாய்’ என்றும் சோமலெ அவர்கள் குறிப்பிடுகின்றார். ‘கொம்மி’ என்று குறிப்பிடும் வழக்கத்தினைச் ‘சண்முகர் கொம்மி’, ‘நடேசர் கொம்மி’ போன்ற நூற்பெயர்களால் அறியலாம்.

நன்னன்னா கொட்டுதல், தட்டியாங் கொட்டுதல், கொண்டான் கொட்டுதல் என்று தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில் அழைக்கப்படுவதாக ஆய்வாளர் திரு. ஆறு. இராமநாதன் குறிப்பிடுகிறார்.

‘நன்னன்னா கொட்டவும் நாளாச்சி – அம்மா
நாணயமான ஏரிக்குள்ளே தான்’

என்ற நாட்டுப்புறப்பாடலால் இதை அறியலாம்.

கும்மியடித்தல், கும்மியாடுதல், கும்மி கொட்டுதல் என்றும் ‘கும்மி’ என்ற சொல்லை விரித்துரைப்பர்.

கும்மி கொட்டும் முறை :

பெண்கள் வட்டமாக நின்றுகொண்டு குத்து விளக்கு, தெய்வச்சிலை, மலர்க்கூடை, பலகாரக்கூடை போன்ற இவற்றில் ஏதாவது ஒன்றை நடுவில் வைத்து அதனைச் சுற்றி வந்தவாறு கைகொட்டி ஆடிப்பாடுவர். பெண்கள் இறுக்கிக் கட்டிய ஆடையுடன் நன்றாகத் தங்களை ஒப்பனை செய்து ஆடுவதாகக் கும்மி நூல்கள் விளக்குகின்றன. பெண்களில் பெரியவர் சிறுமியர் என்ற வேறுபாடுகள் எவையுமின்றி இணைந்து நின்று ஆடுவர். பெரும்பாலும் சிறுமியரும் கன்னியரும் கும்மி கொட்டுவதுண்டு. மங்கலப் பெண்களே ஆட்டத்தில் கலந்து கொள்வதாகக் கும்மிப் பாடல்கள் கூறுகின்றன.

‘குங்குமப் பொட்டுகள் தானணிந்து வண்ணக்
கூட்டங்கள் போலவே சேர்ந்துகொண்டு
மங்கலப் பெண்க ளெல்லா மபிசேக
மண்டபம் முன்வந்து சேருங்கடி’

என்று வரும் பாடலால் இது செவ்வனே விளங்கும்.

கும்மி கொட்டும் பொழுதுகள்

கும்மிப் பாட்டுக்கும் இறை வணக்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. பெண் தெய்வ வழிபாட்டில் கும்மி ஒரு முக்கியப் பங்கு பெறுவதாகக் கூறலாம். இன்றும் தமிழ்நாட்டில் மாரியம்மன், பகவதியம்மன் போன்ற பெண் தெய்வங்களின் கொடை விழாக்களில் பத்து நாள்கள் தொடர்ந்து பெண்களால் கும்மிப்பாடல்கள் பாடப்படுகின்றன. பொங்கல் பண்டிகை, பெண்கள் விரதமிருத்தல், முளைப்பாரியிடல், இராவண்டை போடல், மழைவேண்டல், நிலாக் காலத்தில் இன்பமாகப் பொழுதைப் போக்கல் முதலிய நிகழ்ச்சிகளில் கும்மியடித்துப் பாடுவது வழக்கம்.

கும்மியின் வகைகள் :

பாடலமைப்பு, ஆடல்முறை ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளைக் கொண்டு இயற்கும்மி, ஒயிற்கும்மி என்று இருவகையாகப் பிரிக்கின்றனர். ஆண்கள் கொட்டுவது ஒயிற்கும்மி ஆகும்.

கும்மிப்பாடல்களின் பாடுபொருளைக் கருத்தில் கொண்டால் சமூகம், சமயம், வரலாறு ஆகிய மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அனைத்துக் கும்மிப் பாடல் களையும் அடக்கி விடலாம்.

சமூகக் கும்மிகளைச் சீர்திருத்தம், நாட்டுப்பற்று, அறிவூட்டல் என மேலும் மூன்றாகப் பிரித்துக் காணலாம். அறிவூட்டல் என்ற உட்பிரிவை கதை, விளக்கவுரை என்று இருவகைப்படுத்தலாம்.

சமயக் கும்மிகளை இந்து, கிருத்தவ, இசுலாம் சமயச் சார்புக் கும்மிகள் என்று பிரிக்கலாம். இந்து சமய உணர்வுடைய கும்மிகளைப் புராணம், இதிகாசம், தத்துவம், சிறு தெய்வக் கதைகள், தெய்வத்துதி என ஐந்து உட்பிரிவுகளாகக் கூறலாம்.

வரலாற்றுக் கும்மிகளைத் தனிமனித வரலாறு, நாட்டு வரலாறு, சிறப்பு நிகழ்ச்சிகள் என்று மூவகைப் படுத்தலாம்.

அமைப்பு முறை

கும்மிப் பாடல்களை முதலில் குழுவின் தலைவி பாடுவாள். மற்றவர்கள் அவளைப் பின்பற்றிப் பாடுவர். அனைவரும் சேர்ந்து பாடுவதும் உண்டு. சில சமயம் எதிர்பாட்டும் பாடுவர். கலைநயத்துடன் பாடப்பெறும் கும்மிப்பாடல்கள் முதலில் இறைவழிபாடாகவே இருந்துள்ளன. பன்னெடுங்கலம் மனப்பாடமாகவே வாழ்ந்திருக்க வேண்டும். இதன் மெட்டமைப்பு மக்களைக் கவர, பல வழிநடைப் பாடல்கள் கும்மி மெட்டில் எழுதப் பெற்றுள்ளன. பின்னர் பல கதைப்பாடல்கள் கும்மி அமைப்பாக எழுதப்பெற்றன.

கும்மிப்பாடல்கள் காப்புச் செய்யுள் பாடியே தொடங்கப் பெறுகின்றன. கதைப்பாடல்கள் போன்று வளர்கின்றன. இறுதியில் வாழ்த்துடன் முடிவதைக் காணலாம். பெரும்பாலான கும்மிப் பாடல்களின் தொடக்கத்தில் அவை கும்மிக்கு உரியவை என்று வெளிப்படையாகக் கூறுவதை ஆசிரியர்கள் வழக்கமாகக்

கொண்டுள்ளனர். பெண்களை விளித்துக் கும்மியடித்துப் பாடுமாறு வேண்டுவதைக் காணலாம்.

கும்மியடித்துப் பாடும் பெண்களே தங்களுக்குள் பேசிக் கதையை வளர்த்துச் செல்லும் முறையைச் சில கும்மிகளில் பார்க்கலாம். கும்மி ஆசிரியர் தானே கதையைக் கூறுவதையும் பாத்திரவுரையை அதனுடன் இணைப்பதையும் இடையிடையே காணலாம்.

கும்மிப்பாடல்கள் பெரும்பாலும் இரண்டு அடிகளை உடைய கண்ணிகளால் ஆக்கப்பெற்றிருக்கும். இயற்கும்மியின் கண்ணிகள் அடிக்கு ஏழு சீர்களைக் கொண்டதாக இருப்பதை மிகுதியாகக் காணலாம். முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனை பெற்றிருப்பதனால் அந்த இடத்தில் அடி மடக்கி எழுதுவர். வெண்பாவுக்குரிய தளைகள் வருவதே சிறப்பாகக் கருதப்படுகின்றது. இது தவிர ஒவ்வொரடியினும் நாலாவது சீர் தனியசைச் சீராக வருவதும் உண்டு.

மிக அருகிய நிலையில் எட்டுச் சீர்களையுடைய இரண்டு அடிக்கண்ணிகள் வருவதும் உண்டு. இன்னொரு அடி சேர்ந்து ஒரு இடைச்சொல்லின் துணையுடன் இணைந்து வருவதையும் சில கும்மிப்பாடல்களில் காணலாம்.

ஒயிற்கும்மிப் பாடல்கள் சந்தக் கவிகளாக விளங்கு கின்றன. முதல்வரி நான்கு சீர்களையும் இரண்டாம் வரி மூன்று சீர்களையும் பெற்று வரும். மூன்றாவது வரியும் நான்காவது வரியும் இரண்டடிக்கு சீர்களைக்

கொண்டிருக்கும். இவ்விரு வரிகளும் எதுகை பெற்றிருக்க வேண்டும். இவ்விரண்டு வரிகளுக்கும் வெண்டளை பார்ப்பதில்லை. ஐந்தாவது வரி மூன்று சீர்களைப் பெற்றுவரும். ஐந்து வரிகளின் முதற்சீர்களும் மோனை பெற்றிருக்கும். இடையிரண்டு வரிகளைத் தவிர மற்ற வரிகள் வெண்டளை தழுவிவரும்.

பாடலின் எளிமை, இனிமை, கதை விளக்கத்துக்கு உதவும் தன்மை, ஆடலுக்குப் பொருந்தும் பான்மை ஆகிய பண்புகளே கும்மிப்பாடலின் சிறப்புத் தன்மைகள். 19 - ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கும்மிப்பாடல்கள் மிகுதியாகப் பாடப்பட்டன. அவை ஓர் இலக்கிய வகையுள் அமையும் இயல்புகளுடன் வளர்ந்தன.

இசைக்கும் தாளத்துக்கும் பொருந்தும் சுவையான இயல்புகளுடன் கும்மிப்பாடல்கள் விளங்குகின்றன. மக்களைக் கவர்ந்த சிறப்பு நிகழ்ச்சிகளைக் கும்மிப் பாடலாகப் பாடி மகிழ்ந்துள்ளனர். கதைகள், உண்மை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கொண்டு பின்னப்பட்ட கும்மிப்பாடல்கள் அறிவு விளக்க கருத்துக்களை வாரி வழங்கியுள்ளன.

தமிழ் இலக்கிய வானில் தனக்கே உரிய தனித்துவத் தன்மைகளுடன் தனி இலக்கிய இனமாக விளங்கும் தகுதியுடன் கும்மிப் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. முந்திய தலைமுறைக்குக் கலையின்பம் கொடுத்த கும்மிப் பாடல்கள் இனிவரும் தலைமுறையினருக்கு இன்பம் கொடுக்கும் என்று கூறலாம்.

பதிப்புரை

நம் நாட்டில் இராமாயண, மகாபாரத இதிகாசங்களுக்குப் பின்னர், அரிச்சந்திரன் பற்றிய புராணம் வாய்மையின் குறியீடு என்கிற வகையில் மக்களின் மனத்தில் இடம்பெற்ற ஒரு கதையாகும். மக்கள் வாழ்க்கையில் வாய்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவும் வாய்மையால் ஏற்படும் சிறப்பை எடுத்துக்காட்டவும் அரிச்சந்திரனுடைய கதை காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இன்றளவும் அரிச்சந்திரனுடைய கதை கிராமங்களில் திருவிழாக்காலங்களில் விடிய விடிய நாடகமாக நடத்தப்பட்டு வருவதன் மூலம் அதன் சிறப்பை அறியலாம். மேலும் அம்மானை, கும்மி போன்ற வடிவங்களிலும் அரிச்சந்திரனுடைய கதை பல்வேறு ஆசிரியர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில், பதிப்பிற்காக ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்டது ‘அரிச்சந்திரன் கும்மி’ என்னும் பெயரிலமைந்த தாள்சுவடியாகும். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் R.NO.5343 என்ற எண்ணுள்ள தாள் சுவடி இது. இதன் மூலச்சுவடி அதே நூலகத்திலுள்ள R.NO.5018 எண்ணுள்ள ஓலைச் சுவடியாகும். அது காணக் கடைக்கவில்லை. 12 ½ x 10

அங்குல நீள அகலமுள்ள தாளில் 51 பக்கங்களில் அமைந்துள்ள இந்நூல் முழுமையாக உள்ளது. ஓர் ஏடு (33-ம் எண்ணுள்ளது) மட்டும் இல்லை என்று ஏடு பெயர்த்தெழுதியவரால் எழுதப்பட்ட ஒரு குறிப்பு கிடைத்துள்ளது.

ஆசிரியர்:

நூலின் இறுதியில்,

'ஆதர வாகிய விஞ்சையூர் மேவும்
அமைந்த ராயன்சொல் செந்தமிழே'

எனவரும் அடியால் இதன் ஆசிரியர் பெயர் அனுமந்தராயன் என்பது தெரியவருகிறது.

அமைப்பு:

எழுசீர் உடைய ஈரடி கண்ணிகளால் அமைந்துள்ளது இந்நூல். தாள்சுவடியில் கண்ணிகளுக்கு எண் தரப் படவில்லை. இடையிடையே எதுகை அமையப்பெறாத அடிகள் உள்ளமையால் எண் கொடுக்க இயலவில்லை. சிற்சில இடங்களில் ஏழுக்கு மிகுந்தும் குறைந்தும் சீர்கள் இடம்பெற்றுள்ளன. சிற்சில இடங்களில் (மூலச்சுவடியின் சிதைவு காரணமாக) வெற்றிடங்கள் உள்ளன. பிழைகளும் மலிந்து காணப்படுகின்றன.

'அரிச்சந்திரன் கும்மி' என்ற இந்நூலின் கதை அரிச்சந்திரனுடைய நாட்டு வளம் கூறிவிட்டு இந்திர லோகத்தில் வசிட்டரும் விசுவாமித்திரரும் வாதிடும் இடத்திலிருந்து தொடங்குகிறது. அதற்கு முன்னான,

அரிச்சந்திரன் சுயம்வரத்தில் சந்திரமதியை மணந்தது, அவர்களுக்கு மகன் பிறந்தது போன்றவற்றைக் கூற வில்லை.

ஏடு பெயர்த்தெழுதியவர் பிழைபோலும், பாடல்கள் வரிசை மாறி இடம்பெற்றுள்ளன. கதைத் தொடர்ச்சியைக் கொண்டு அவை ஆய்வாளரால் முறையாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

அரிச்சந்திரன் கதை கூறும் பிற கும்மிகள்

ஏ.என்.பெருமாள் அவர்களுடைய 'கும்மிப்பாடல்கள்' என்ற கட்டுரையில் (தமிழ் இலக்கியக் கொள்கை 7) அரிச்சந்திரன் மீதான அச்சான கும்மி நூல்கள் ஏழு குறிப்பிடப்பட்டுள்ளன. ய. மணிகண்டன் அவர்களுடைய 'அரிச்சந்திரன் அம்மானை' பதிப்பில் இரண்டு கும்மி நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டில் ஒன்று அந்த ஏழிலிருந்து வேறானது எனத் தெரிகிறது.

ஏ. என். பெருமாள் குறிப்பிட்டுள்ளவை:

1. அரிச்சந்திர மகாராஜன் பேரில் மனோன்மணிக் கும்மி, நரசிம்மையர், திருதொட்டிக்கலை, 1880.

2. அரிச்சந்திர மகாராஜன் பேரில் கும்மி, ஆறுமுக சுவாமிகள், திருவெண்காடு, 1882.

3. அரிச்சந்திரன் கும்மி, மு. பொன்னுசாமி முதலியார், 1874.

4. அரிச்சந்திரன், மட்டுவார் குழலம்மாள் அச்சுக்கூடம், 1880.

5. அரிச்சந்திரன் கும்மி, ஏ. ரங்கசாமி முதலியார் (பதி), பூமகள் விலாசம் பிரஸ், சென்னை, 1935.

6. அரிச்சந்திரன் கொம்மி, இராசு நாயகர் (பதி), வித்தியா விநோத அச்சுக்கூடம், 1877.

7. அரிச்சந்திரன் கொம்மி, பெ. சுப்பிரமணிய செட்டியார், திருமகள் விலாச அச்சுக்கூடம், 1875.

மேற்குறிப்பிட்டவற்றில் 1,5,7 எண்ணுள்ள நூல்கள் மூன்றும் ஆய்வாளர் பார்வைக்குக் கிடைத்தன.

ய. மணிகண்டன் குறிப்பிட்டுள்ளவை:

1. அரிச்சந்திரன் கும்மி, கே. வைரவ நாடார், சின்னைய நாடார் பிரஸ், திருப்பத்தூர், 1888.

2. அரிச்சந்திரன் கொம்மி, வயிரவன் கோவில் சிறுகுளத்தூர் சுப்பிரமணிய செட்டியார், குவலய ரஞ்சனி அச்சுக்கூடம், சென்னை 1888.

இவை தவிரவும் அரிச்சந்திர புராணக்கும்மி என்ற நூலொன்றும் ஆய்வாளருடைய பார்வைக்குக் கிடைத்தது (அரிச்சந்திர புராணக்கும்மி, சரவணப் பெருமாள், ஹமீதிய்யா பிரஸ், நாகப்பட்டணம், 1911).

மேற்குறிப்பிட்ட பெ. சுப்பிரமணிய செட்டியார் அவர்களின் அரிச்சந்திரன் கொம்மி என்ற நூலும் இந்த அரிச்சந்திரன் கும்மியும் ஒத்த கதைப்போக்கினையும் நடையையும் தொடரமைப்பையும் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சந்திரமதியை அரிச்சந்திரன் விலை கூறுமிடத்தில்,

"காசி நகர்தனி லுள்ளவரே யெந்தன்
கண்மணி யைவிலை கொள்வீரே
தேசுயர் மாது பசுங்கிளியா ளெந்தன்
தேன்மொழி யைவிலை கொள்வீரே" (63)

என வரும் கண்ணியும்

சந்திரமதியை விலைகொண்ட அந்தணர் அவள் வேலைகள் இன்னவெனச் சொல்லுமிடத்து,

"பத்துக் கோட்டைநெல்லு குத்தவேணும்
நித்தம்
முற்றத்தில் சாணந் தெளிக்கவேணும்
அத்துகள் தப்பாம லந்தி பகலெல்லாம்
அரைக்கீ ரைக்கும்நீர் கொட்டவேணும்"
(70)

எனவும்

"எட்டுநா ளைக்குமுன் காய்ச்சிய கூழையும்
அட்டி யில்லாமல் குடிக்கவேணும்" (71)

எனவும் வரும் கண்ணியும் இவ்வரிச்சந்திரன் கும்மியுடன் தொடர் மற்றும் சொல்லமைப்பில் ஒத்திருப்பவை.

இந்நூலில் தெளிவான நடை இல்லை. எழுத்துப் பிழைகள் (ற-ர, ள-ழ, ஒற்றுப்பிழைகள்), சொற்பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. விரிவாகக் கூறாமல் சட்டென முடியும் விதத்தில் கதை மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மூலக்கதையை அறியாதவர்களால் கதையைத் தெளிவாகப் புரிந்துகொள்வது சிரமம். உவமை, உருவகங்கள் அதிகம் இல்லை. ஒரேயொரு பழமொழி ('தேடிப் போன தெய்வம் எதிராகவே வந்து தெரிசிக்கக் கொடுத்தது போல்') காணப்படுகிறது.

ஏதோ ஒரு பதிவு அல்லது விருப்பம் கருதி ஆசிரியரால் எழுதப்பட்ட ஒன்றாகத் தெரிகிறது.

அரிச்சந்திரன் கும்மி

அரிச்சந்திர மகாராஜா பேரில் கும்மிப்பாட்டு

சத்திய குலத்தில் உதித்தவனாம் - எங்கள்
சாமி அரிச்சந்திரன் நெ....தன் மேல்
நித்தியமும் கும்மிப்பாட்டு உரைக்க
வாலை யத்தில் .... ப்பாமே.

அம்பத்தாறு தேசத்து ராச ருக்கும்
அதிகாரன் அரிச்சந்திரன் வீரியவன் மேல்
இன்பமுடன் கும்மிப்பாட்டு உரைக்க - வாலை
அயம்பொன் னுடையவள் முன்னிற்கவே

சூரிய குலத்தில் உதித்தவனாம் - எங்கள்
துங்கன் அரிச்சந்திரன் சிங்கத்தின் மேல்
மாரிபோல் கும்மித் தமிழ்ப்பாட ...
மகமாயிதான் ..... துக்க .... யே.

ஆறினிலொன்று கடமை வாங்கிக் கொண்ட
அரிச்சந்திரன் மீதில் கும்மிப் பாட்டுரைக்க
காயுமாகிய வாலை ... சரசுவதி .....
தப்பாமல் பாதங் காப்பாமே.

நீதியுடன் அரசாளும் அரிச்சந்திரன்
ராசாதி ராசன் வசீகரன்மேல்
சோதியுடன் கும்மிப் பாட்டுரைக்க
திருச்செந்தூர் ....பாதம் பணிந்தே

காசி மயானத்தில் ஈசன் எழுந்துமுன்
அக்காச்சி கொடுத்திடும் முற்கதையில்
வாசினை யாகவே மகிழ்ந்து கும்மிபாட
வாலை சரசுவதி முன்னிற்கவே

என்னேழு அம்பத்தாறு தேசம் புகழ
இயல்பான அயோத்தியில் மேவிவாழ
மன்னவன்மேல் கும்மிப் பாட்டுரைக்க எங்கள்
வாலை சவுந்தரி முன்னிற்கவே.

தேவ ரனையர் முனிவர் புகழ்ந்திடும்
தீரன் அரிச்சந்திர ராசன் என்னும்
காவலன்மேல் கும்மி பாடுதற்கு - ஆதி
காளி மகமாயி தான்துணையே

சாதியிலே தான் கப்படியான நானிருக்கு
மத்தலம் விஞ்சை நெட்டூர
ஆதி பருவத்தில் ஈசர் மகிழ்ந்தருள்
அரிச்சந்திரன் அக்கதையைச் சொல்லுகிறேன்.

தந்திர மாகவே மந்திரம்அஞ்சோதுமின்
தானம் புகழும் தங்கவி வல்லோரே
வந்தவினை யெல்லாம் மந்தரன் காதித்தபின்
எந்திரு வாக்கில் அருள்புரிவீரே.

வேதிய மாமுனி தன்னருளால் அக்கவி
வாணர்கள் பாதம் அடிதொழுது
................கும்மி பாடுகிறேன் தமிழ் - நேரே
தானே யெனக்கு அருள்புரிவீர்.

நித்திய மும்தான் நீதி விளங்கிடும்
ரெத்தின சிம்மாசனந் தனில்வளர்
உத்தமன் மேல்கும்மி பாடுதற்கு வாலை
சத்தி சடாதரி முன்னிற்கவே.

சீருடன் அயோத்தி ஆளுந் திருசங்குத்
தீரணம் பயின்றஅரிச் சந்திரன்மேல்
வீரியமாய்க் கும்மிப் பாட்டுரைக்க - எங்கள்
வேள்முகவன் பாதங் காப்பாமே.

முத்தியில் .... மிகுந்த அரிச்சந்திரன்
உத்தமன்மேல் கும்மிப் பாட்டுரைக்க
புந்தி அனேகம் ... விளைவியக்கு மீன ... ள ...
சத்திக் கெவுசாரி முன்னிற்கவே.

காளை வாகனனே அனேகஞ் சொரிகி ....
தாரணி மால்அரிச் சந்திரன்மேல்
ஏழை சிறுகும்மி பாடுகிறேன் க ... வானம்
மகள்பாதம் அடிதொழுது

லோகத்தி லேஉள்ள மானிடர்க ளெல்லாம்
..... போல் பிணியண் டாமல்
சால வாக்கியத் துடன்வான .... மிப்பாலொன்று
சாத்துகிறேன் கேளும் தோழிப் பெண்ணே

வையகம் எல்லாம் புகழும் அயோத்திவாழ்
மன்னன் அரிச்சந்திரன் ராச்சியத்தில்
துய்யதோர் நாட்டில் வளமையெல்லாம் நன்றாய்ச்
சொல்லுறேன் கேளடி மெல்லியரே

வாளை கமுகு அசைந்தாட ரெத்தினம்
மாணிக்கம் முத்து ருண்டாட ....
தாளைக ளெல்லாம் சொரிந்து தெரு
தானே ஒதுங்கிடும் நாடதுவே

மன்னவன் அஞ்சீ மைந்தார் தனிலே ரெத்தினம்
மாணிக்கம் முத்து விளைந்திடுமாம்
சென்னலும் முத்தும் விளைந்தலை மோதிய
தீரன் அரிச்சந்திரன் நாடதுவே.

பாரினில் அத்திறம் வானென்று சொல்ல
புகழ்படைத்து மால்அரிச் சந்திரனும்
ஆறிலினி லொன்று கடமை கொண்டுபெண்
ணரிவை மருமுகம் பாராமல்

பொய்யொன்று சொல்லாத அரிச்சந்திரன் ராசனும்
மெய்நின்று ராசாங்கம் செய்திடும்நாள்
தெய்வலோ கத்தில் நடந்திடும் சேதியைச்
செப்புகிறேன் கேளும் தோழியரே.

நாவல் போத்திப் பணிந்திடவே தெய்வ
ரம்பையள் நாட்டியமுஞ் செய்திடவே
தேவர்கள் வந்து அடிபணிய இந்திர
தேவர் கொலுவுக்கு வந்தனரே.

கானமயிற் றோகை மாமுனிவன் நல்ல
கட்குஞ் சடைகழுமந் திட்டமுடன்
வானவர் போற்றுமந்த தேவேந் திரன்அருகில்
வசிட்ட மாமுனி வந்தனரே.

அண்டாண் டங்கள் கிடுகிடென நல்ல
ஆக்கிர மாகவே கோபத்துடன்
வண்டுசிலம்பு புலம்பியவர் சிவவிசுவா மித்திரர்
...... தாற்ப வந்து .... தோன்றினரே.

முப்பத்து முக்கோடி தேவர்களும் – நல்ல
முனிவர் நாரதர் மாமுனியும்
பாப்ப முலைனி கலைக் கோட்டு ரிசி
பரிவான கெவுதமன் வந்தனரே

இப்படி யாக விருக்கும் வசிஷ்டர்
தேவேந்திரன்பார்த்து ஏது சொல்வார்.
மயிப்படி சூழகடல் வெய்யோனே யிங்கே
வாழும்அரிச் சந்திரமகா ராசாவே

சொல்லப் பிறட்டாகவே ராசரீகஞ் செய்ய
துச்சனரே யிதுஞாய மோதான்
கற்பினையாய் மறுதாரம் விரும்பவும் சொல்லப்
பிறப்பாகுமோ ராச ருக்கும்

இந்தப் படியாய் முனியுரைக்க அதுக்கு
ஏது சொல்வான் அந்தயிந் திரனும்
மந்திரத்தில் உபதேசம் அறிந்திடுமோ
முனிநான் சொல்லக் கேளுமிப்போ

எந்தெந்த தேசத்தில் ஆனாலும்
இயல்பான மறுமுகம் பாராமல்
தந்திர மாகவே ராசரீகஞ் செய்ய
அந்தறம் மவ ... னுண்டானால் சொல்லுமப்பா

யன்னஎன நான்சொல் கேளும் இப்போ
வடிவான அயோத்தி நகரம் தனிலே
யென்னுடைய சிஷ்யன் அரிச்சந்திர ராசனும்
ஏதொரு வார்த்தையும் பிசகான்

சொன்னமொழி தவறாத வன்அனங் காள்இரு
தொகை யரகன் முகங்கள் .... பாரான்
மன்னன்அரிச் சந்திரன் பொய்கள்சொல் லான்என்ற
வார்த்தையைக் கேட்டந்த கௌசிகனும்

வீற்றிருந்த விசுவா மித்திரனும் கோபம்
மீறி யெழுந்து ஏதுசொல் வானாம்

பார்த்திருந்தீர் பரப்பிரமா ரிசியே - அவன் -
பாலன் அரிச்சந்திர ராசனுந்தான்.
வாக்கிலே பொய்சொல்லான் என்றுசொல்லி யிந்த
மாமுனி சொன்னதைக் கேட்டியளொ

சாத்தியென்ற அயோத்தி யாபுரி யில்முதிர்க்
காத்தியென்று ரெண்டு தாசியுண்டு
வீத்திருந்த விசுவாமித் திரனுஞ் சொல்ல
வேதமா முனியும் ஏது சொல்வான்

சந்திர சூரியர் தெற்கா னாலும் - சத்த
சற்கருமந் தாளா யெழுந்தாலும்
இந்திரனே அரிச்சந்திர ராசனும்
இயல்பான மொழிகள் தவறானே

என்று வசிஷ்டரும் அந்தா றுரைக்க அதுக்கு
ஏது சொல்லுவான் கௌசிகனும்
சென்றவர் வாக்கினால் பொய்சொல்லச் செய்து
தீர்க்கமாய் சாட்சியும் விட்டாக்கால்

மன்றினிலத் தேவர்கள் தான்அறிய உந்தன்
வாக்குனால் சபதம் சொல்லும் பிள்ளாய்
சென்றுஅரிச் சந்திரன் வாக்கினால் பொய்யாகத்
தீர்க்கமாய் சாட்சியும் விட்டாக்கால்

மன்றினி லுள்ளபேர் நகைக்கவே... ணநூல்
வாக்குதப் பாமலே நானருத்து
நின்ற நிலையில் செய்தவ செல்லாம்
நிச்செமாய் உனக்கு ஈந்திடுவேன்

நெசமாய்ச் சொன்ன வசிஷ்டரைக் கோசிகனும்
எதிர்த்து யேதுசொல் வாராம்
வாசம் பொருந்தும் அயோத்திமா நகரில்
வாழும்அரிச் சந்திரன் வாக்கதினால்

தேசமறியவே பொய்சொல்லவே யான்செய்து
தீர்க்கமாய் சாட்சியும் விட்டாக்கால்
ஈசர் அறியவே நீர்சொன்ன சபதம்
எந்தனுக்கு அதுஉண் டாகும்.

அண்டாண் டங்கள் கிடுகி டெனரிஷி
ஆச்சிர மத்தைவிட் டெழும்பினரே
மண்டலம் புகழும் அயோத்திக்கு வார
வழியைக் கூடி நடந்தனரே

கண்டபெய ரெல்லாம் ஒளித்திடவே நல்ல
காரிளை மாதரசன் பயந்திடவே
குண்டலங் காதில் அசைந்திடவே ராசன்
கோட்டை முகப்பினில் வந்தனரே.

வாசலில்உள் ளகாவல் காரரே நானொரு
வார்த்தை சொல்லுகிறேன் கேளுங்கடா
ஆசார வாசல் மணிமுகப் பில்ஒரு
கோசிக மாமுனி என்றுசொல்லிப்
பேசுங்கண் ணும்வாயும் மூடுமுன் னேஅந்த
ராசனைக் கூட்டியே வாருங்கடா

நல்லதென் றந்தக் காவலரு மந்த
ராச னிடத்தினில் சென்றனரே
சொல்லுறேன் கேளு மன்னய் யாவே
துடுக்கான ரிஷிபோலே தோணுதய்யா
நில்லாமல் உங்களைக் கூட்டிவரச் சொன்னார்
நேச வானே மகாரா சாவே.

வாரும்பிள் ... ய் வாசல் காவலரே நம்முட
வாசலிலே ரிஷிவந் தனரே
பாரினில் வேதியர் மாமுனியை நீங்கள்
பார்த்தடுத் திரோ காவலரே

யென்றுசொல்லி ராசன்தான் எழுந்து
ரிஷியின் திருப்பாதம் அடிதொழுது
இன்றெந்தன் பாதம் கண்ட பொழுதே
இயல்பாகவே காட்சியும் பெத்தேனய்யா

தேடிப்போனதெய்வம் எதிராகவே வந்து
தெரிசிக்கக் கொடுத்தது போல்
முடவந் தலையிலே கெங்கை குதித்தாற்போல்
மோட்சத்தை நானும் அடைந்தேன் அய்யா

பாதம் பணிந்திடும் மார்கருக்கு ரிஷி
பக்கமொரு வெண்ணீறு தான்தரித்து
நீதம்தப் பாமலே ராசரீகஞ் செய்து
பேதகம் வாராமல் வாழ்ந்திருப்பீர்

உன்திருப் பாதத்தைக் கண்டபொழு தேவந்த
ஊழ்வினை யெல்லாம் தீந்தே னய்யா
வந்திடுஞ் சேதியை இன்னதென்று
வகையாய் எனக்கு அருள்புரிவீர்

வந்தோ முந்தனைக் காணவென்று பின்னும்
மனதிலொன்றை நினைத்து வந்தோம்
சிந்தையும் மெத்தக் களிகூர்ந்து வேள்விச்
சிலவுக்குப் பிச்சை கேழ்க்கவந்தோம்.

தேசிகரே யெங்கள் மாமுனியே வேள்விக்கிச்
செல்லும் பொருளதைச் சொன்னாக்கால்
காசலை யாக்கிவனந் தருவேன் எங்கள்
கர்த்தரே விசுவா மித்திரரே.

பத்தனே நானுஞ் சொல்லக் கேளுமிப்போ
பணம்மெத்த வென்று சித்தம் நோக்காதே
புத்தி யாகவே வேள்விப்பிச் சைக்கிப்போ
சித்தம் மகிழ்ந்துநீ தருவாய்.

ஆனையின் மீதிலே ஆளேறிக் கவண்கல்
எறிந்த உயரம் செம்பொனுந் தானும்
தான்எனக்குக் குமித்துப் பணிந்தாக்கா லிப்போ
நானே யுனக்கு வளந்தருவேன்.

அந்தப்படி அரிச்சந் திரனும் அவர்
சொல்லிய ஈவுப் படியாக
சந்தத மான திரவியத்தை மன்னன்
தானே குவித்தானே கண்குளிர

மன்னவனே அரிச்சந் திரனே பணம்
பின்னுடனே வாங்கிக் கொள்ளுகிறேன்
இன்னமும் உந்தன் வசத்திலே தான்வட்டி
யில்லாக் கடனாக வையும் பிள்ளாய்

நல்லதென்று அரிச்சந் திரனும் முனி
சொல்லிய வார்த்தை பிசகாமல்
வல்லவி மாமுனியைத் தொழுது ராசன்
வானர மனைக்கி யேகினனே

கோபமதாப் அந்தமா முனியும் ரிஷி
ஆரணியந் தன்னில் சென்றனரே
தேவர்சபை தன்னில்வாய் கொள்ளாத வார்த்தை
செப்பியே வந்ததுக் கென்னசெய்வோம்

கேட்க்கும் முன்னே பணமும்தான் கொடுத்தான்
சென்னலதாக் கிவிளைந்த மகத்துவத்தால்
வாக்கிச் சாரமாக சென்னல் அழிக்க
வனத்தில் மிருகம் உண்டாக் கினரே.

ஆளிகள் சிங்கம் ஒருகோடி புலி
யண்டண் டங்களில் இருகோடி
கூளிகள் சாரை யொருகோடி யெலி
கொக்கு முக்கோடி படைத்தனரே.

பன்றியள புவ்வாய் இருகோடி பல
பறக்கும் பட்சிகள் முக்கோடி
அன்றிலச் சிற்கி யொருகோடி கென்ன
லழிக்கும் தாறா யிருகோடி

தேளுடன் நட்டுவாக் கிளியு மாயதில்
சேர்ந்திடும் பத்துக்கால் பூச்சியுமாய்க்
கோளான் வட்டப் பாச்சா ளையுடன் முனி
கொய்த்தன னேகம் படைத்தனரே.

இந்தப் படிமாய் வனத்தில் மிருகங்கள்
ஏகமாய் சென்னல் அழிக்கக் கண்டு
கொந்தலருங் கடியா னவரும்
கொத்தவ னிடத்தில் வந்தனரே.

மன்னவரே அய்யா ராசாவே எங்கள்
வானம் பயிர்சென்னல் முதலாய்
தின்று அழிக்குது மாமிருகம் நாங்கள்
மன்னவனே யெங்கும் போவோ மய்யா.

என்னமொழி சொல்ல வந்தீர்காண்
இயல்பான குடியான பேர்களேதான்
சொன்னமொழிப் படிநாளை யதையற்றில்
சென்னல் அழித்த மிருகங்களை

நாழிகை செல்முன் யாளிகள் சிங்கத்தை
நம்முடைய மாமுனி தன்னருளால்
வாளிக்கு இரையாக நானிடுவேன் உங்கள்
வாகான தேசத்துக் கேகிடுவீர்.

மன்னவன் அரிச்சந்திரன் சொன்னதைக் கேட்டும்
வாகான தேசத்துக் கேகினரே
சொன்னமொழி தவறாத மன்னன் செடி
சூழ்ந்த வனந்தனில் சென்றனரே.
மன்னவர் செக்கள் எல்லோ ருக்கும்
மகராசனே மகிழ்ந்தா பரணம் கொடுத்தாரே

செக்க மகிழ்ந்து இருக்கின்ற வேளையில்
மாமுனிவர் மெத்த கோபங் கொண்டு
கோசிக மாமுனி பன்றியைத் திஷ்டித்து
ராசன் தளத்திலே யேவிவிட்டு

மண்டல மெல்லாம் அதிர்ந்திட வேவர
நச்சத் திரமெல்லாம் உதிர்ந்திடவே
அண்டரங்கள் ஓடி ஒளிந்திடவே
அரிச்சந்திரன் முன்னே யெதிர்த்ததுவே

பன்றியைப் பார்த்து அந்த மன்னவனும்
திடங்கொண்டு மண்டலங் குலுங்கிடவே
ஒண்டிய தாகவே மண்டி கொண்டு
அந்தப் பன் றியைக்கொன் றுளக்கினரே

வாசம் பொருந்திய கோசிக மாமுனி
தேசிகர் முன்னம்போய் இறந்ததுவே.

மாலைகள் கீழே புதைந்திட வேமுனி
விழிகள் ரெண்டும் சிவந்திடவே
சிலைபோலே ரெண்டு பெண்களைத் தான்ரிஷி
சீக்கிர மாகப் படைத்தனரே.

பெண்களைப் பார்த்து அந்தமா ரிஷியும்
மன்னன் அரிசந்திரன் ராசனைத்தான்
உங்கள் வசத்திலேமை யல்கொள்ளும் படியாக
உபாயங்கள் செய்து வந்தாக்கால்

என்னுடைய தவசில் பாதி யுங்களுக்கு
ஈகுரேன் என்று அனுப்பினரே
மன்னன் அரிச்சந்திரன் கோட்டைமுன் பாகவே
பாண பெண்களும் தோன்றினரே.

கண்டவர் தானும் மயங்கி விழுந்திடக்
கல்லும் மெழுகாய் உருகிடவே
மண்டலம் போற்றுமரிச் சந்திரன் முன்னேபோய்
மாதர் எதிராய்நின் றாடினரே.

சேனை பதாதிகள் சூழ்ந்திருந் தோரந்த
ஸ்திரீகளைக் கண்டு மயங்கிடவே
தானே உத்தராப் பிருதிகள் பேசின
சத்திய கீர்த்தி மயங்கிடவே.

ஆடின பெண்களைப் பார்த்தரிச் சந்திரன்
அதிகசந் தோஷ மாச்சுது வென்று

வாருங்கோ அயோத்தி மன்னவ னேவெகு
மானத் துக்கோ உம்மிடத்தில் வந்தோம்
சேருங்கா ணும்எங்களை நீர்தானு மிப்ப
சேர்ந்திடு பள்ளி யறைதனிலே

ஆவி பதறியே மன்னவ னும்அடா
மந்திரி யிங்கே வாரும் பிள்ளாய்
பாவிக ளாகிய அன்னையரை யிப்ப
பத்தும் பிள்ளாய் கோட்டைக் கப்பாலே

வாசமதாய் ரெண்டு பெண்களையும் மந்திரி
வாசலுக் கப்பாலே தள்ளிவிட்டான்
கோசிக மாமுனி தேசிகன் பாதத்தில்
வேசை அலறி விழுந்தாளே

என்னத்தைச் சொல்லுவோம் முனியே எங்கள்
ஈசுவரரே விசுவா மித்திரரே
மன்னவன் எங்களைத் தாயென்றான் பின்னும்
வசைகள் சொல்லியே வைதா னய்யா

பாடினோமே கல்மெழுகா யுருகிடப்
பார்த்திருந்தோ ரெல்லாந் தான்மயங்க
ஆடி னோமே வெகுமோ டியதாய்
அரிச்சந்திரன் நெஞ்சுரு கலையே

விந்தையதாய்ப் பெண்கள் சொன்னதைக் கேட்டந்த
விசுவா மித்திரர் கோபங் கொண்டு
மந்திரத்தால் அந்த மன்னவ னைஉயிர்
மாய்க்க வேணுமென்றே கினரே

வாரும்பிள் ளாய்வாசல் காவலரே உங்கள்
மன்னவனை யிங்கே கூட்டிவாடா
சீருடன் காவல் காரர்கள் சென்றந்த
தீரனைக் கூட்டியே வந்தனரே வந்து

பாதத்தில் வீழ்ந்தடி பணிந்தா னந்தப்
பாவிவிசு வாமித்திர னேதுசொல்வான்

கோபமதாய் முனிரெத்தின கிரீடத்தைக்
காலாலே எட்டி உதைத்திடவே
காவலான அரிச்சந் திரனும் ரிஷி
பாதத்தைக் கண்ணில் வைத்துக் கொண்டு

மாணிக்க கால்பட்டுப் பாதங்கள் நோகுமே
மாமுனியே அய்யா கௌசிகனே
ஆணிப் பொன்னான கிரீடம் பட்டுந்தன்
அடியிணைகளும் நொந்திடுமே

வஞ்சனைகள் என்ன செய்தாலும் கோபம்
மிஞ்சியே யென்னை உதைக்கவென்றால்
நெஞ்சிலே யென்னையுதைக் கொண்ணாதோ அய்யா
நீர்தான் சொல்லும் மாமுனியே

கும்பிடுங் கள்ளா உஞ்சேதி யெல்லாம் இப்ப
வீம்பாகவே மெத்த தோணுதடா
அம்புவியா ளிருவரையும் எனக்காக
வேசே ருங்காண் மன்னவனே

வாசம் பொருந்திய சந்திரமதி நீங்கள்
மாறு முண்டான் பெற்ற தாயாரும்
தேசத்தைக் கேட்டாலும் ஈவதே அல்லாது
ஆசையினால் மையல் கொள்வதில்லை

மன்னவர் எல்லாரும் சாட்சி பிள்ளாய்
வாசால மந்திரி மார்களே நீர்சாட்சி
சொன்னமொழி தவறாத மன்னன்
நன்னகரை யெனக்கு ஈந்தனென்றான்

இப்படிச் சொல்லவே மாமுனியு மதுக்கு
இசைந்து ராசனும் ஆமெனவே
கற்புடைய சந்திரமா மதிவந் தங்கே
கர்த்த னிடத்திலே யேதுசொல்வாள்

மாமுனி கேட்பதோ பெரிது அய்யா
மன்னவரே தேசம்தான் பெரிதோ
தாமசம் இல்லாமல் கோசிகற்குச் சீமை
தானம தாகவே ஈயுமென்றார்

அந்தப்படி அரிச்சந் திரனும் நல்ல
அயோத்தி யாபுரித் தன்முதலாய்
சிந்தை மகிழ்ந்தங்கே கோசிகற்கு ராசன்
சீமையெல்லாம் தானம்செய் கின்றானே

தேசிகரே அய்யா மாமுனியே யெந்தன்
தேசங்களைத் தானம் பண்ணிவிட்டேன்
வாசினை யாகவே நாங்கள் எல்லாம்வன
வாசம தாகவே போறோம் அய்யா

பொய்சொல்வே னென்றுதாஞ் சொல்லவந் தாலுந்தன்
புத்தியும் போமே முன்னாள் தனிலே
கைவச மாகவே யுன்னிடத்தில் பொன்னைக்
கட்டி யளக்காமல் வைத்தனடா

சத்து நேரத்துலே அந்தப்பணந் தன்னைக்
கட்டியே அனேகமாய் வைத்துவிடு
அத்தனே விசுவா மித்திர ரென்று
ஆன தவணையை வைத்தாக்கால்

சத்திய வாக்கு தவறாமல் பொன்னைக்
கட்டியே அனேகமாய்த் தாரெனய்யா
பத்தியதாய் நாற்பத் தெட்டு நாளுக்குமேல்
பாங்குடன் பொன்னை நீகுடுத்தால்

மிச்சம தாகவே மாமுனி சொல்லவும்
வந்த அரிச்சந்திரன் சம்மதித்தான்
துச்சன னாகிய நச்செத் திரனை
யிச்சணந் தன்னில் அனுப்பினரே

குட்டியூ கையனில் தான்பிடித்து நல்ல
சீறு சந்தனம் பூசிக் கொண்டு
நட்டனை யாகக் குதித்துக் கொண்டுகுட்டி
நச்செத் திரனும் தோன்றினனே

அண்டாண்டங் கிடுகி டெனமுனி
ஆசிரமந் தன்னில் அடிபணிந்து
மண்டலத்தை யாளும் மன்னவன்பின் னேபோய்
வாங்கிக் கொண்டுபணம் வாரும்பிள்ளாய்

சிந்தைகளி கூர்ந்த மந்திரியும் அந்தச்
சிறுவ னாகிய லோகிதனும்

உய்யவே அயோத்தி யாபுரிப் பட்டணம்
ஊரி னுள்ளோர் அழுதிடவே
வையங்கள் எல்லாம் அய்யகோ வென்றிட
மன்னன் நகரைவிட் டேகினனே

நாடிழந்து நகர்தா னிழந்து ராசன்
சித்திர சிம்மாசனம் தானிழந்து
கானகம் தன்னிலே மன்னவன் பட்டிடுமக்
கதையைச் சொல்லுகிறேன் கேளும் பெண்ணே

போடாவென் றெட்டி மேலடிப்பான் அந்த
ராசன் பதறியே தான்துடிப்பான்
வாடாஎன் பணத்தைத் தாடா வென்று
மன்னன் கையில்கிட்டி கட்டினனே

வாசினை யுள்ள மறையவனே யெங்கள்
வாய்முனிக்கு வாய்த்த தூதுவனே
காசி நகரில் போன வுடன்பணம்
கட்டியே ரொக்கமாய்த் தாரெனய்யா

நல்லது சீக்கிரம் வாருங்க டாவென்று
பல்லைக் கடிந்து நடந்திடுவான்
நில்லடா நானென்று சொல்லுகிறேன் என்று
நெத்தியில் கல்லையும் வைத்திடுவான்

மங்கையரும் சந்திரமா மதியும் வாசல்
மந்திரியும் சிறுலோ கிதனும்
எங்கள் கையில் கிட்டி போடுமென்று
ஏங்கி யழுதவர் தான்புலம்ப

சிந்தைகள் நொந்து தவித்திடவே
சந்திரமா மதிநின்று புலம்பிடவே
இந்தப் படியாய் வனங்களெல் லாம்விட்டு
ஏழாம் வனத்திலே தான்நடந்தார்

ஏழாம் வனத்தில் நடக்கும் அதிசயம்
இன்பமாய்ச் சொல்லுறேன் கேளும் பெண்ணே
சாதமும் நூறுவகைக் கறியும் இப்பச்
சணிகந் தன்னிலே வேணுமடா

சொன்னதைக் கேட்டந்த லோகிதனும் பிச்சை
சனம்மா புரியிலே தானெடுத்து
நன்னய மாகிய அன்னம் சமைத்து
மன்னன் பசியை அமத்தினரே

சாதங்கள் சாப்பிட்டு இளைப்பாறிக் காசி
நகரையே தேடிப் போம்பொழுது
நீதிவானாம் அரிச்சந்திர ராசனையே
ஏது காரணம் செய்வானாம்

பாலும் பழஞ்சோறும் சாப்பிட்டது
நேக்கு வேர்ப்பதாக யிருக்குதடா
காலுகள் மெத்தவும் நோகுதடா
தோளிலே தூக்கிக்கொள் மன்னவனே

சொன்னபடி யெல்லாம் கேட்கிறே னந்தச்
சொல்பிறழா மன்னனுந் தான்குனிந்தான்
மன்னன் அரிச்சந்திரன் தோளிலே கோசிக
மாமுனி தூதுவன் ஏறினன்

கருமேகம் போல்மழை தான்பொழிய
நல்லகப் புகழெல்லாம் தழைத்தேற
யேறேரும் ராசன் அரிச்சந்திரன்தோள்
இசைந்த நட்சத்தி னேறிடவே

காசியில்வாழ் விசுவ நாதா நான்செய்த
கருமங்கள் நீரும் பொறுக்காமல்
தூசளித்த தூதன் ஒப்புவித்தீர்
காசியில் மேவிய ஈசுவரனே

மைக்கண் மடமாது தானழுக அந்த
மந்திரி முன்னே புலம்பிவர
மிக்கவே மேகம் அதிர்ந்திட்டாப் போலேதான்
அக்கினி ஆறு குறுக்கிட்டதே

பத்தி வருகுது அக்கினியா றுவிசுவா
மித்திர னிடத்துக்குப் போறேன்டா
பத்துலெச்சங் கோடி பொன்னமக்கு நீதான்
கைக்ககூலி யாகவே கொடுத்தால்

மிக்கவே நானும் நடப்பனென்று சொல்ல
கையிலே கூலி தரோமென் றுரைத்தார்
மைக்கண் மடமாது முன்நடக்க அந்த
அக்கினி யாறு வழிவிடுமாம்

விந்தையாக வோஅந்த ராசனுந் தானந்த
மந்திரியைப் பார்த்து ஏதுசொல்வான்
சிந்தைகளி கூர்ந்த மந்திரி யேஒரு
செய்திநான் சொல்லுகிறேன் கேளும் பிள்ளாய்

அக்கினி யாத்தங் கரைதனிலே சத்திய
வாக்கு தவறாமல் தானிருந்தால்
மைக்கண் மடமாது எந்தனுக் காவது
மரண காலத்தில் வாவென்று சொல்லி

பேசின வார்த்தை இகழாத சத்திய
கீர்த்தியை ராசன் அனுப்பிக் கொண்டு
கோசிக மாமுனி தன்னருளால் காசிமா
நகரில் வந்து சேர்ந்தனரே

வாசினை யாகவே தானம் பண்ணிக்
காசி யீசுவரர் கோவில் சுற்றிவந்து
பூசையதாய் அபிஷேகம் நைவேத்தியம்
புகழ்ந்து பார்த்து மனமகிழ்ந்து

கர்த்தன் விசுவேசர் பாதம் பணிந்தந்தக்
கற்புடைய மாதுபாதம்பணிந்து
பத்து தெருக்களுந் தான்கடந்து
பதிவான தெருவிலே வந்தனரே

மித்திர னானநச் செத்திரனுங் கோவித்து
உத்தமன் கையினில் கிட்டிகட்டி
இத்தெரு வினில்உந்தன் பத்தினி மாதை
எல்லோரும் அறிய விலைகூறும் பிள்ளாய்

ராசன் மனதுகலங் கிடவேசந் திரமாமதி
ராசனைத் தண்டம் செய்து
வாசகனே யெந்தன் ஆசைக் கணவரே
வாய்திறந்து விலை சொல்லுமய்யா

அய்யகோ சந்திர மாமதியே மனம்
ஆறுமோ காப்பு நிலைநிறுத்தி
வெய்யவன் மாமுனி பொன்குடுக்க
விலைகூறுகிறேன் ஊரி லுள்ளோரே

காசி நகரில் உள்ளோரே யெந்தன்
கண்மணி யைவிலை கொள்வீரோ
வாசினை யான மலரணியுஞ் சந்திர
மாமதி யைவிலை கொள்வீரோ

சென்மத்தில் பிரியாத பசுங்கிளியைச்
செய்யிழை யைவிலை கொள்வீரோ
அன்புமொழி வளர்பெண் அணங்கை அடியாளன்
சந்திர மதியைவிலை கொள்வீரோ

கோசிக மாமுனி பொன்குடுக்க விலை
　　கூறுகிறேன் செட்டி வர்த்தகரே
காசி நகரில் உள்ளோரே
　　சந்திர மதியைவிலை கொள்வீரோ

மட்டடங்கா யானைமீ தேறி கவண்
　　வாங்கி வீசுர பொன்குடுத்து
பட்டணந் தன்னில் உள்ளோரே யெந்தன்
　　கட்டழகி தன்னைக் கொள்வீரே

திங்கள் மும்மாரி பொழியும் அயோத்தியில்
　　செங்கோல் இழந்துநான் வந்ததனால்
கங்கை குலத்தில் உதித்தோரே
　　சந்திரமதி மங்கையைக் கொள்வீரோ

சத்திய வாக்குத் தவறாமல் விசுவா
　　மித்திரர் செம்பொன்னுக் கீடாக

நாடிழந்தேன் நகரம் தானிழந்தேன் கொலு
　　ரெத்தின சிம்மாசனம் தானிழந்தேன்
பேரிழந்தேன் ஊரிலுள் ளோரே எந்தன்
　　பெண்கொடி யைவிலை கொள்வீரோ

விலைகூறி யேதான் பேசி அந்த
　　வேதியர் வீதியில் வருகையிலே
தலையில் கொம்புபோல் நாமங்கள் சாத்தியே
　　காளகண் டய்யனும் தோன்றினனே

கோதா புரியில் ....த்தானஞ் செய்துநல்ல
குழைந்த சந்தனம் பூசிக் கொண்டு
தீதா சிடதித் தோமென் றாடிய
திம்மா பட்டரும் வந்தங்கே தோன்றினரே

ராமரா மாவென்று சொல்லிக் கொண்டு
நல்லாய் நரைத்த தாடியும் மீசையுமாய்
சோமசெயம் ராமசெயம் என்று சொல்லி
திம்மா பட்டரும் தோன்றினரே

ஆரு பிள்ளாய் தெருவினி லேதான்
அரிவை யைவிலை கூறுகிறாய்
ஊரென்ன பேரென்ன சொல்லும் பிள்ளாய்
இந்தக் காரிழை யைவிலை கொள்வதற்கு

நானிருக்கும் தலம் அயோத்தி யென்பேர்
அரிச்சந் திரனய்யா வாள்
முனிகோ சிகர்பொன் குடுக்க சந்திர
மாமதியை விக்கவந் தேனய்யா

வையக மெல்லாம் புகழும் அயோத்தியில்
வாழ்ந்திடும் சத்திரிய மன்னவனே
செய்யிழை யாளைநாம் வாங்கிக்கொள் வோம்விலை
சீக்கிர மாகவே சொல்லும் பிள்ளாய்

ஆனையின் மீதிலே ஆளேறிக் கவண்
கல்லெறிந்த உயரஞ் செம்பொன்
தானே குமித்து முரியெழுத எந்தன்
சந்திர மதிவிலை தான்சரிதான்

அந்தப் படியே பணமும் தாரேன் வீட்டி
லருவை செய்யிற வேலையைக்கேள்
மந்தையில் சாணங்கள் தான்பொ றுக்கி
மதுக்கொள் ளாமல் முட்டை தட்டவேணும்

நிதம்பத்துக் கோட்டைநெல் குத்த வேணும்
நித்தம்கத் தரிக்கொல்லை குத்தவேணும்
அத்துகள் தப்பாமல் ஆயிரம் நாற்றுக்களைத்
தினமுந் தண்ணீர் வார்க்கவேணும்

திட்டமுடன் பதினேழரை நாழிகை
செல்லும் வேலைகளை வாங்கிக் கொள்வேன்
எட்டுநா ளைக்குமுன் காச்சின கூழையும்
அட்டிப் பண்ணாமல் குடிக்கவேணும்

என்றைக்கு முன்விடிந்து போகாமல்
எழுந்திருந்து வேலை செய்யவேணும்

இந்தப்படி யெல்லாஞ் செய்வாளோ என்றுதான்
ஏங்கி அரிச்சந்திரன்அழுக
சிந்தை கலங்கி ராசனுக்குச் சந்திர
மாமதி தேறுதல்கள் சொல்லி

மறையவர் கழுமத்தான் அறிய வில்லை
வாங்கிக்கொள் ளும்அய்யா மன்னவனே
இறையவன் அரிச்சந் திரனும் உரியெழுதி
கையினி லீந்த பின்பு

பாலனையும் சந்திரமா மதியையும் அங்கூந்தல்
பத்தி யிழுத்து அடித்தனரே
வேலைக்கு வாடி வெள்ளாட்டி யென்றுசொல்லி
மெத்த மனங்களும் நொந்திடவே

செந்திரு வாகிய சந்திர மாமதி
தீயின் மெழுகுபோல் தான்உருகிச்
சிந்தை கலங்கியே ராசனிடம் வந்து
சந்திர மாமதியும் அழுகலுற்றாள்

முன்னமே செய்த குறையிதுவோ
பிருமதேவன் எழுத்தின் படியிதுவோ
மன்னவரே என்ன செய் வேனென்று சந்திர
மாமதி கண்ணுநீர் தான்சொரிய

சிந்தை கலங்கி அரிச்சந்திர ராசனுந்
தீயிலிட்ட மெழுகுபோல் உருகி
சந்திர மதியையும் தான்பார்த்து அரிச்
சந்திரன் கோவென் றழுகலுற்றான்

நட்டாத்துக் கோரைபோ லானேனே இப்ப
நடுக்கடல் துரும்பாகி னேனே
பட்டபகல் தீபமா னேனே எந்தன்
பைங்கொடியே சந்திரமா மதியே

கலையிழந்த மானம்போ லாணேனே இப்ப
கன்றிழந்த பசுவாகி னேனே
விலைய தாகிய மாமறையோர் சொன்ன
வேலைகள் செய்யநான் போறே னய்யா

திங்கள் மும்மாரி பெய்யும் அயோத்தியில்
செங்கோல் தழைத்தவர் வாழ்கவென்று
மங்கையரே சந்திரமா மதியே சத்திய
வாக்குத் தவறாமல் வேலைசெய்வாய்

வீரமுடன் மறையோ ரெழுந்து எந்தன்
வேலையைத் தாமதம் பண்ணுகிறாய்
நேரிழையே இங்கே வாடி யென்று
பச்சைப் பாலகனை யெட்டித் தானடித்து

சிந்தை கலங்கியே சந்திரமதி அரிச்
சந்திர ராசனைத் தான்பார்த்து
விந்தைய தாகமறை யோனுக்கு வேலை
தந்திர மாகவே செய்தனளே

பட்சமுடன் அந்தநெட் சந்திரன் பாதத்தை
இச்சையுடன் பணிந்து ஏதுசொல்வான்
உச்சித மான அந்த அயோத்தியாபுரி
உசந்த கோசிகர் தன்னிடத்தில்

சத்திய வாக்குத் தவறாமல் அப்பணம்
தந்துவிட் டானென்று சொல்லுமய்யா
பத்துலெட்சங் கோடிபொன் னையுமே உங்கள்
பாட்டன் கொடுப்பானோ சொல்லு பிரட்டா

கக்கிசமன் பரியந்திர மாயுரிப்பேன் இப்ப
அவசியமா யுன்னுட லைவித்து
அசட்டை பண்ணாம லெந்தன் பணத்தை
அரைக்கணந் தனிலே நீகுடுடா

சொன்னபடி நிசமாகும அய்யா ரிஷி
தூதுவரே எங்கள் வேதியரே
நன்னகர் காசிநகர் தனிலே இப்ப
நானே விலைப்படப் போறே னென்றான்

கோசிகன் தூது நச்சந்திரன் கடனுக்கு
வீதியி லேவிலை கூறினனே
காசிமா நகரிலுள் ளோரே என்னை
வாசனை யாய்விலை கொள்வீரே

சத்திய வாக்குத் தவறாமல் அத்தூது
நட்செத் திரீகன் பணமுங் கொடுக்க
இத்தெரு வினிலுள் ளோரே என்னைப்
பெத்தவர் போலவிலை கொள்வீரே

இந்தப் படியாக ராச னுந்தான்
இயல்பான தெருவினிலே கூறுகையில்
கந்தைத் துணியை யுடுத்திக் ொகண்டு
கருங்கச்சை யிடுப்பினில் கட்டிக் கொண்டு

தொந்தாமென் றுபறைதான்மு ழங்கமாட் டிறைச்சியுந்
தோளிலே போட்டுக் கொண்டு
விந்தைய தாகவே தன்னம் பாரி
வீரசாம்பன் வந்துதோன் றினனே

ஆரடா இத்தெரு வீதியிலே விலை
கூறுகிறாய் வாங்கிக் கொள்ளுகிறேன்
சீருடனே பணம்இந்தா பிடியென்று
மாட்டிறைச்சி யைத்தோளி லேத்தினனே

மாட்டிறைச்சி தோளில் வைத்துக் கொண்டுபறை
வீட்டுக்கு ராசனும் ஏகினனே
ஊட்டி வளர்த்திடும் என்தாயே வீட்டில்
வேலைக ளுண்டானால் சொல்லுமம்மா

வேலையைச் சொல்லுகிறேன் என்று சொல்லி
வீரசாம்பன் பறைச்சியும் தானெழந்து
காலமே செத்திடும் கன்றை யுரியென்று
கத்தியைத் தானும் எடுத்து வைப்பதான்

சத்திய வாக்குத் தவறாமல் கன்றைத்
தானுரிக்க கையில்தான் அறுத்தான்
சித்தம் கலங்கிட ராசனுந் தானந்த
தேவி பறையனும்வந் தேதுசொல்வான்

முன்னும் பின்னும் மாடறுத்த தில்லையோடா
இன்னொரு வேலைகள் சொல்லுகிறேன்

நல்லது என்றரிச் சந்திரனு மந்த
சாம்பன் சொல்லையும் நெஞ்சில் பயமாக
வல்லமையால் சுடுகாடு தன்னில் மன்னவனும்
பாணி அண்டு பண்ணவே

மன்னவனும் அந்தப் பாணி தன்னில்
உசக்கேறி யிருக்கின்ற வேளையிலே
என்ன நினைவுதான் வந்திடுமால்
இயல்பான அரிச்சந்திர ராசனுக்கு

முன்னமே அயோத்தியா புரியில் ரெத்தின
சிம்மா சனத்தில் கொலுவிருந்தோம்
அந்நகர் போகாது இக்கொலுக் கென்று
மன்னவனும் அங்கோத் திருந்தான்

விந்தை யாகவே மாம றையோன்
வீட்டில் மைந்தனும் சந்திரமா மதியும்
சிந்தை கலங்கியே வேலைகள் செய்திடும்
தீவினையைக் கேளும் தோழிப் பெண்ணே

நெல்லைக் குத்தென்று அடித்திடுவான் வாயால்
சொல்லி யதட்டிப் படுத்திடுவான்
கொல்லைக்குத் தண்ணீர் இறைக்கச்சொல்
வானப்பாவி
கொட்டடத்துச் சாணத்தைத் தட்டச் சொல்வான்

வீட்டுக்குத் தண்ணீர் எடுத்துவா வென்பான்
அப்பசு மாட்டுக்குப் பில்லறுத்தா வென்பான்
காட்டில் விறகு விற்கவென்று பூசை
மாட்டிடுவா னந்தப் பாலகனை

இந்தப்ப டியாகவே வேலை செய்து
இயல்பாகிய சந்திர மாமதி மகனும்
சிந்தை கலங்கி இருக்கின்ற வேளையில்
வந்தந்தப் பாப்பானும் ஏது சொல்வான்

வாடி வெள்ளாட்டி யுன்மகனை இப்ப
ஓடி காட்டினில் சீக்கிரமாய்
தேடித் திரிந்து விறகொ டித்து
தெர்ப்பை கொண்டுவரச் சொல்லடிநீ

ஆண்டுமை தொண்ட நாயகனே யுங்கள்
...யான பசிமெத்தக் கடினம் அய்யா
கூளில்லாத் தண்ணீரை ஊத்தச் சொல்லி
தெர்ப்பை கொண்டுவரச் சொல்லு வேதியரே

என்னடி வெள்ளாட்டி சக்கந்தம் பேசுகிறாய்
சொன்ன மொழிப்படி கேளாமல்
தண்ணீர் இவன்பொற் பாதைமே லுண்டென்று
சொன்னென்று போகச் சொல்லடிநீ

இந்தப்ப டியாக உரைத்திட வேமகன்
சந்திர மதியைச் சரணஞ் செய்து
சிந்தை மகிழ்ந்து சிறுவருடன் காட்டில்
தேடி விறகுக்கு ஓடினனே

கர்ப்பினை யாக விறகொடித் துத்தன்
பாலக ரிடத்திலே ஏதுசொல்வான்
தெர்ப்பை கொண்டு வாரேன் என்றுசொல்லி
சிறுலோ கிதனும் பெருங்காட்டில் சென்றான்

சின்ன வனங்களுந் தான்க டந்து
சிறுலோ கிதனும் பெருங்காட்டில் சென்றான்
வர்ண மலையிலே தானேறி அப்பாலன்
வளர்ந்த தெர்ப்பையைக் கண்டிறங்கி

வாசனை யாகவே தெர்பையைக் கொய்தான்
அந்தக் கோசிக மாமுனி சோதனையால்
பேசின வாக்குத் தவறாமல் அக்கரு
நாகம் எழுந்து கடித்ததுவே

சோதனையால் பாம்புதான் கடிக்க சிறு
லோகிதனும் தரைகீழ் விழுந்தான்
வேதனையால் பாரிற்றான் புரண்டு கொஞ்சம்
ஏதோ நினைவுவந் தேதுசொல்வான்

பாம்பு கடித்தங்கு நாமிறந்தால் நம்முடைய
தாயாருக்கு யாருசொல்லப் போறார்கள்
மாமரந் தன்னில் இறந்தாக் கால்சிறு
வங்கணத்தார் சொல்வா ரென்றுசொல்லி

ஓடியே காடுவனங் கடந்து சிறு
பாலகர் தன்னிடம் போய்விழுந்தான்
வாடி விழுந்திடும் பாலகனைத் தூக்கியே
வாய்திறந்து சொல்லுமென் றுரைத்தார்

பிறந்தேன்நான் அயோத்தி யாளவென்றிப்ப
பெத்த வர்கள் முகம்பா ராமல்
இறந்துபோ றேன் நானிவ் வனத்திலே தாய்க்கு
இயம்பு வீர்களென் அண்ண மாரே

தேசங்கள் காசிநகர் வாழ்க குரு
வாகிய வசிட்டர் தான்வாழ்க
கோசிக மாமுனிதான் வாழ்க தந்தை
தாயர் தினம் வாழ்கவென்று

வேதியன் சுகமாக வாழ்க வென்று
சிறுலோகித னச்சீவன் இறந்ததுவே
சேதிகள் சொல்லவே வேணும் என்று
சிறுபா லகரும் மாநகர்க் கேகினரே

சிந்தை கலங்கியே சந்திர மதிசிறு
மைந்தனைக் காணோமே என்றே மதிமயங்க
விந்தைய தாகவே தான்கடந்து பாலர்
சந்திர மதியிட மேதுசொல்வார்

ஏகமாய்ச் சென்று விறகொடித் தப்பால்
எல்லோரும் மாமரம் வந்திருந்தோம்
வேகமாய் நாடி தெர்ப்பைகொய் தானங்கு
கருநாகம் கடித்து இறந்தா னம்மா

பாலன் இறந்தமொழி கேட்டு மாது
கீழே விழுந்து புரண்டழுதாள்
மேலெல்லாம் மண்ணுகள் தான்புரள சந்திர
மாமதி கண்ணும்நீர் தான்சொரிய

ஆயன் விதித்தபடி யிதுவோ விரும்மா
அன்றெழுத் துமுரை யென்றுசொல்லி
நாய னிடத்திலே சொல்லிக் கொண்டு
பிள்ளையைத் தேடுவோ மென்றுதான் வந்தாளே

வேதியரை அய்யா· மாமறை யேமகன்
விறகொடித்து வனத்தில் பட்டான்
நீதி யாகவே நான்பார்த்து மனம்
ஆறி வருகிறேன் அய்யாவே

பையன் இறந்தென்ன நஷ்டமடி உந்தன்
பணத்தில் சேதங்க ளுண்டோதான்
வெய்யினில் வேலைகள் செய்ய வென்றோ
சத்தேச யோகம் பண்ணுகிறாய் பெண்ணரசே

வித்துநான் வேலைகள் செய்தாலு மங்கே
        மெத்தவே யெத்தனை வாங்கினாலும்
பெத்த வயறுகள் தீயாய் எரியுதே
        கர்த்தனே யென்னை அனுப்புமய்யா

நீசென்று மண்ணிலேதான் புதைப்பாய் தீயில்
        நேராக வைத்துப் பொசிக்கிடுவாய்
நாய்நரி தின்றாக்கால் நன்மை யுண்டு
        வேலையைத் தாமதம் பண்ணாதே பெண்ணரசே

வேலையைத் தாமதம் பண்ணவே யில்லைசில
        காலமே நான்வந்து சேருகிறேன்
பாலைவன மெல்லாம் தேடி மகனைப்
        பார்த்து வருகின்றே னய்யாவே

அழுது புலம்பின சந்திர மதியை
        அடிப்பெனென் றய்யன் துடித்துக் கொண்டு
பொழுது விடிந்து பதினொன் றுக்குமேல்
        போய்வாடி சீக்கிரம் வெள்ளாட்டி

வேலையைத் தாமசம் பண்ணாமல்
        விடியயென்றைக் குமுன்னே வந்துவிடு
காலமே வேலைக்கு வாரேனென் றுசொல்லி
        வேதியன் வீட்டைவிட் டேகினளே

கோசிக மாமுனி சோதனை யால்மழை
        பொழிய இடியிடிக்க கழுமந் தான்திற

சோலை வனத்திலே செல்லும் பொழுது
நாலு திக்கு திசையும் தெரியாமல்
காலி னாலே வழிதான் தடவிச்சிறு
லோகிதனைத் தேடித்தான் அழுதாள்

தாரணி தன்னையும் தானிழந்து மறை
வேதியன் சொல்படி தெர்ப்பை கொண்டுவர
ஆரணி மான வனத்தி லிறந்திடும்
லோகிதனைத் தேடித் தானழுதாள்

வந்தவன மெல்லாந் தான்தேடி உயர
மாமரச் சோலை யருகினிலே
சிந்தை கலங்கியே சந்திர மதிஅவள்
மைந்தனைத் தேடியே தான்அழுதாள்

தேடி யலைந்தந்த மரவடியில் பின்னும்
ஓடியே தேடி வரும்பொழுது
மாடிழந்த மகன் காலிலே தட்டவும்
வாரி யெடுத்து அணைத்தாளே

அய்யோ மகனே நானென்ன செய்வேன்
எந்தன் மேனியெல்லாம் நொந்து தவிக்குதடா
வையகந் தன்னை இழந்ததல் லாலிந்த
மாவனந் தன்னி லிறந்தாயோ

வெள்ளியி லாயிரம் தீவெட்டி சூழுமே
அயோத்தி யாபுரி நன்னகரில் இப்ப
கொள்ளிவாய்ப் பேய்வந்து பந்தம் பிடிக்குதே
குமரா இவ்விதிக் கென்னசெய்வேன்

சங்கீத மேளம் முழங்குமடா உந்தன்
சிம்மா சனந்தன் னருகே
இங்கித மானமத் தவளை வனமெங்கும்
முழங்குதே என்மகனே

இப்படி வைத்து அழுதி ருந்தால் நாயன்
சொல்படி தப்புமோ வென்றுசொல்லி
கற்புமாது மயான வெளிச்சத்தைக்
கண்டு மயானத்துக் கேகினளே

என்மகனே என்ன செய்வே னென்று
அவனடித்த விறகையும் தானடுக்கி
மன்னவனை அந்தக் கட்டைமே லேத்தியே
மங்கை விழுந்து அழுதனளே

கூவென்ற சத்தமரிச் சந்திரன் கேட்டந்தக்
கூக்குர லாகுதென்று ஓடிவந்து
வீரவாகு விறகுகூலி தான்குடுத் துப்பிணந்
தானே சுடுவென்று தானுரைத்தான்

எந்த னிடத்திலே ஒன்றும் வகையில்லை
உந்தனுக்குத் திறம் உண்டு பிள்ளாய்
சிந்தைகளி கூர்ந்து மைந்தனைத் தகனம்
செய்யென்று சொன்னதுக் கேதுசொல்வான்

அழுத்த மாகவே ஒன்றுமில் லையென்று
வழுத்து மாதரசே கேளாய்
கழுத்துலே தானும் மாங்கிலி யம்அதோ
காண்குது நீவிற்றுக் குடுவென்றான்

.....னமுங் கற்புங் காணாத தாலியை
ஈனப் பறையருங் கண்டு கொண்டான்
கானகந் தன்னி லிறந்த மகனோடே
நானு மிறக்கப் போறே னென்றாள்

செத்துப் போறேனென்று சொல்லவந் தாயுந்தன்
பர்த்தாவின் பேரும் ஊரும் சொல்லுமென்றான்
இந்தமகன் செத்ததையுஞ் சொல்லிக்கூட
இப்பவே செத்துப்போ றேனென்று சொன்னாள்

வாசினை யான அயோத்தி நகர் சீமை
யாண்டஅரிச் சந்திரன் எந்தன் கணவன்
கோசிகர்க்குச் சீமைதா னிழந்து பின்னும்
குடுக்க வேண்டி யதனாலே

காசியில் வேதியர் தன்னிடத்தில் விலை
யாகினோம் நானும் மகனுமதாய்
ஈசனும் எங்களை வித்து விட்டுஅவர்
ஏகி னாரே நானறியேன்

மாட்டிறைச் சியைத்தின்னுந் தான்பற யன்சுடு
காட்டிலே தாலியைக் கண்டுசொன்னாய்

இந்தப் படியாகத் தானுரைக்க ராசன்
வெந்து தனலாகத் .....
சிந்தை கலங்கி அரிச்சந்திர ராசனும்
சந்திர மதியைப் பார்த்தேது சொல்வான்

வாசினை யானமலர் அணியும் சந்திர
மாமதியே யுன்னை விற்றபின்பு
கோசிகன் தூது நட்செத்திரன் கடனுக்கு
நானே பறையன்போ லாகினனே

செந்திரு வாகிய சந்திர மதியிடந்
தீரன் அரிச்சந்திரன் தான்உரைக்க
சிந்தை கலங்கி யேதான் வரிமனம்
நொந்து புண்ணாகவே தான்அழுதாள்

முன்னேநான் செய்திடும் தீவினையோ
பிருமதேவன் எழுதின படியிதுவோ
மன்னவா யிப்பாடு பட்டதெல்லாங் கேட்டிரு
வைத்தி ருப்பலே தனயஞ் சடலம்

ஆர்ணங்கே பெண்ணே ஈசர் கட்டளை
ஆராலே தள்ள முடியுமோதான்
தாரணி யாளப் பிறந்தமகன் தன்னைத்
தான்வாங்கி முத்தமிட் டேயழுதான்

பாவி வயத்திலே தான்பிறந்தாய் தெர்ப்பை
பாம்பு கடித்து இறக்கவென்றோ
ஆவி பதறுதே என்ன செய்வேன்
சிறுலோ கிதனே அடாயென் மகனே

அயோத்தி யாபுரி எண்ணவொண் ணாத் தேசம்
அரசு செலுத்துவா யென்றிருந்தேன்
வையகமும் தன்னை இழந்ததல் லாலிந்த
மாவனந் தன்னில் இறந்தாயோ

நாடிழந்து நகர்தான் இழந்து மறை
வேதியன் சொல்படி தப்பாமல்
காடுறைந்து தெர்ப்பை கொய்த விடத்தில்
நாகமும் தானே கடித்ததோ யென்மகனே

இந்தப்படி அரிச்சந்திரன் அழுகவே
ஏது சொல்வாள் சந்திர மதியும்
முந்தவே சொல்படி வேலைக்குப் போகவே
மைந்தனைக் கட்டைமேல் ஏத்துமய்யா

இந்த மொழிகளைச் சொல்லவந் தாய்கூலி
ஈயாமல் தகனஞ் செய்தாக்கால்
சந்திர மதிஎந்தன் பெண்கொடியே
சத்தியந்தான் தவறிடும் பெண்ணரசே

மாமறையோ னிடம்தன்னில் சென்று கூலி
வாங்கியே சீக்கிரம் வாரும் பெண்ணே
ஆமென்று சந்திரமா மதியுங் கூலி
வாங்கிவா ரோமென்று சென்றனளே

கோசிக மாமுனி சோதனை யாலக்
காசிராசன் பிள்ளையைக் கழுத்தறுத்து
வாச மலரணி சந்திரமா மதிவரும்
வழியில் கொண்டுவந்து போட்டனரே

சந்திர மதியந்தப் பிள்ளை எடுத்தவள்
தன்மக னாக்குமென்றே அழுதாள்
சிந்தை கலங்கியே தானழுதாள் காசி
மைந்த கத்தானை மடியில் வைத்து

வாசினை யான மலர ணியுமக்
காசிராசனும் பிள்ளையைக் காணாமல்
பேசிய சொல்படி தப்பாத காவல்
காரரை ராசனும் தானழைத்துப்

பள்ளி யறையிலே நித்திரை செய்த
பாலகனைக் காணோங் காவலரே
கள்ளனைத் தேடியே இச்சணந் தன்னிலே
பிள்ளையைக் கொண்டுவா வென்றுசொன்னான்

காவலர் எல்லோரும் ஆமென்று சொல்லியேயப்
பூவனச் சோலையில் தான்நடந்தார்
கூவென்ற சத்தத்தைக் கேட்டிந்த காவலர்
போய்வீழ்ந் தவளைக் கட்டினரே

கட்டியே ராசனிடந் தனிலே சென்று
வெட்டிப் போடச் சொல்லுமென் றுரைத்தார்
வெட்டிப்போ டச்சொன்ன காவலரைப் பார்த்து
வேந்தன் உரைராசன் ஏதுசொல்வான்

ஆதி பரம்பரையோ தெரியாது தான்
பாலனைக் கொன்றதிவ ளல்லவேதான்
மேதினியில் கற்பு மொழியா ளேஒரு
பாலனைக் கொன்றது நீதானோ

மைப்படி கடல்சூழ வேஅய் யோனே
காசியாளும் மகாராசா வேகேள்
கைப்பிடி யாகவே கொண்டுவந் தாரென்னை
வெட்டிப் போடச் சொல்லுமன் னவனே

இருவகையும் தெரியாமல் சொல்ல மாட்டேன்
　　என்று ஏகின ராசனுந்தான்
பருவ மாகிய சிறுவனைக் கொன்ற
　　பாவி யிவளென்று எல்லோரும்

வாரும் பிள்ளாய் வாசல் காவலரே
　　வீர வாகு தன்னிடம் ஒப்பிவித்துக்
கூராக நேரே யிருபிளவாய் வெட்டக்
　　கூறினோ மென்று சொல்லென் றுரைத்தார்

காவலர் அந்தப் படியாகக் கூடி
　　கட்டின கட்டோ டேதான் அடித்து
ஆவி பதறியே சந்திர மதிவீர
　　வாகுவின் வீட்டினில் சென்றனளே

வாரும் பிள்ளாய் வீரவாகு வனேயிந்த
　　நாரியை வாளினால் வெட்டு மென்றார்
கூறுறேன் நான்சொல்லக் கேளுமய்யா சுடு
　　கொம்பையில் என்னடி யானிடத்தில்

கட்டின கட்டு அவிழாமல் விட்டு
　　வெட்டிப் போடச் சொல்லுமென் றுரைத்தான்
மட்டில்லா தான்படைத்து மயானத்தை
　　மன்னவர் கண்டு ஏகிவந் தனரே

சொன்னார்கள் உன்னுடைய நாய னென்றிந்த
　　மங்கையை வாளினால் வெட்டெனவே

சிந்தை கலங்கி அரிச்சந்திர ராசனும்
        தீயிலிட்ட மெழுகுபோ லுருகி
மந்திரஞ் சேரும் மதியர் செயிப்ப
        வந்த வகைதனைச் சொல்லுமென்றார்

வந்திடும் தீவினை தன்னையுமே சந்திர
        மாமதி மன்னனுக்கே தானுரைத்தாள்
மங்கையரை மும்மாரி பொழிய வென்று
        முகம்திருப் பிடாய் கிழக்கே முகமாய்

எந்தன் குருமுனி தான்வாழ்க
        தேவேந் திரலோ கமும்தான் வாழ்க
விந்தைய தாகவே அயோத்தி யாளுகின்ற
        விசுவா மித்திரர் தான்வாழ்க

வாசினை யாகவே காசிநக ரம்மேவும்
        மன்னவனே எந்நாளும் வாழ்கவென்று
ராசனை நின்று சரணஞ் செய்து
        சந்திரமா மதியும் வந்துதா னிருந்தாள்

நன்னகர் காசிநக ரம்மேவும் ராசன்
        பிள்ளையைக் கொன்றமா பாவியென்னை
மன்னவன் தேவி யென்றெண் ணாமல்
        வெட்டி வாக்கு நிறுத்துமே எஞ்சாமி

பாவினையாய் பஞ்ச பூதத்தை மனதில்
        உறுதி யாய்த்தான் நினைத்து
தாலிக்குடை யானென் றெண்ணாமல் வெட்டி
        சத்திய வாக்கு நிறுத்துமய்யா.

மைக்கண் மடமாது தானிருக்க ராசன்
வாளை யுருவி அசைக்கலுற்றான்
அக்கினி யாத்தில் இருக்கின்ற சத்திய
கீர்த்தியும் ஓடிவந் தேதுசொல்வான்

[குறிப்பு : இந்த அரிச்சந்திரன் கும்மியில் 33ம் (முப்பத்து மூன்று) எண்ணுள்ள ஏடு காணப்பட வில்லை. இந்த ஏடு விட்டுப்போய் விட்டதோ அல்லது ஏட்டின் எண் மாற்றிப் போடப்பட்டுள்ளதோ என்பது தெரியவில்லை]

கோசிக மாமுனி பரசுபாரே நானும்
குற்றங்கள் செய்திருந் தாலும்
வாசினை யாகவே கொண்டு பொருத்தி
நல்லவ ராளைத் தந்தருள் மாமுனியே

மண்டலந் தன்னிலும் உந்தனைப் போலவே
வாக்குத் தவறாத நாக்குவன்மை
கண்டதில்லை உந்தன் சொல்லலங் காரத்தை
காரிழையை வெட்ட வேண்டாங்காண்

மைந்தனை உயிருண்டாகச் செய்து
மாதவசில் பாதி நான்தாரேன்
எந்தனுக்கு ஈந்த கதியெல்லாம்
வாக்கில்லை யென்று சொல்லு மன்னவனே

ஆகட்டும் பாரு முனியே யென்று
ஆகாசம் தன்னில் உதித்தெழுந்து
வேகமதாய் வாளைத் தானுருவி ராசன்
வீசிக் குலுக்கி யேதன் ..... சாத்தான்

திட்டம தாகவே மங்கை கழுத்தினில்
தீரனும் ஓங்கி வெட்டிடவே
கட்டுமாலை யாகத் தானுதித்து
வெட்டுக் காரணமாய் விழுந்ததுவே

என்னவிதி என்ன கருமமிது வந்த
ஈஷ .... மாரிச மாகுமென் றது
மன்னவனும் வாளைத் தானுருவி உதிர
மாய்த்திடு வேனென்று தானினைந்தான்

நாரத மாமுனி பாடிவர நந்தி
யீசுவரர் கட்டியங் கூறினெழுந் தவர்
பார்புகழும் தெய்வ லோகத்திலே
பரமேசு வரர்கொலு விருந்தனரே

விந்தையதாய்ப் பரமேசு வரரும் அங்காட்டில்
வேந்தன் துயரத்தைத் தானறிந்து
நந்தி யீசுரனைத் தான்அழைத்து அந்த
ராசனும் வானில் விழுகாமல்

மன்னன் இறவாமல் காரென்று சொல்ல
மயானத்தில் நந்தியும் வந்தனரே
சொன்னமொழி தவறா தவனே பரமே
சுவரர் அந்தா லேவா ரார்காண்

உந்தன்னைப் போலவே வையகத்தில்
ராசனொரு வனையும்நான் கண்டதில்லை
சிந்தை மகிழ்ந்து வரம்குடுக்க
பரமே சுரர் இதோ வாரார்காண்

நந்தியைக் கண்ட அரிச்சந் திரனும்
மிதமிஞ்சி யேகோபம் எல்லாந் தணிந்து
சிந்தை தெளிந்து மனம்ம கிழ்ந்து
ராசன் தெளிந்து நிற்கிற வேளையிலே

முப்பத்து முக்கோடி தேவர்களும்
முனிவோர் களும்கூடி மலர்சொரிய
தேவ துந்துமி முழங்கிட வேபர
மேசுவரர் மயானத்தில் வந்தனரே

காசலையாய் அரிச்சந் திரனும் சந்திர
மாமதியும் சத்திய கீர்த்தியுமாய்
வாசம தாகவே சுற்றிவந்து
பரமேசுரர் பாதம் அடிதொழுதார்

பாதங்கள் செய்தமா பாவியை நானுந்தன்
பாதத்தைக் கண்டு பணிந்ததனால்
தீவினை கருமந்தான் தீந்து முந்தி
செல்வமாய்க் காட்சியும் பெற்றேனே.

சுத்தமாய் நாடு துணையிழந் தெந்தன்
தோகையும் மந்திர மகனிழந்தும்
அத்தனே நான்செய்த பாவங்கள் எல்லாம்
இப்போ சித்தம் மகிழ்ந்தருள் புரிவீர்

இந்தப் படியரிச் சந்திரனும்
பரமேசுரர் பாதம் அடிதொழுது
விந்தைய தாக மயானமெல்லாம் முத்து
மடைகளும் ரெத்தின மாளிகையும்

கோபுரமும் மணிவா சல்களும் ரிஷி
ஆலயமும் சொர்ண மாமதிலும்
புகழுஞ் சிவாலய மும்நந்த
வனங்களும் தென்னஞ் சோலைகளும்

வாசினை யாகமலர் மயானமெல் லாம்புஷ்ப
மாரி யாகவே சொரிந்திடவே
ஈச ரெழுந்து வலம்புரிந்து இராச
போசனுக்கு அளித்தான் புரிவார்

அண்டரும் தேவ ரனைவோ ரும்முனி
யானவரும் பொய்யுரைப் பார்கள்
மண்டலம் புகழும்மார்க் கண்டனுக்கு நல்ல
வார்த்தை தரய வளங்குடுத்தோம்

நாக்கினிலப் பொய்யுரை யாததினால் லோக
ராசருக் கெல்லாஞ் சிரோமணிதான்
பாக்கிய வானென்று தானழைத் தீசர்
பாகமொடு வெண்ணீறு தான்தரித்து

சுப்பிர மணிய ரிடத்தினிலே பரமேசர்
எழுந்து அருள் புரிவார்
அற்புத மானஅரிச் சந்திர ராசன்
அரும்தவத் தினால்பெத் தெடுத்த

மைந்தன் உயிரை யெழுப்பென்று சொல்லவே
மன்னவன் ஈசரைப் போற்றி செய்து
எந்தன் மகனுக்கு முன்னாக காசி
மைந்தனைத் தானும் எழுப்பும் அய்யா

ஈசர் எழுந்து வரம்புரிந்து முனி
ஈசுவரர் தனைப்பார்த்து ஏதுசொல்வார்
ராசனைப் போலவே வையத்தில் முனி
ஈசரே நான்கண்ட தில்லை யென்றே

சிந்தை களிகூர்ந் தீசுவரரும் காசி
மைந்தனை முன்னே யெழுப்பு மென்றார்

பாலர் இருவரையும் தான்எழுப்பிப்
பரமேசுரர் பாதம் அடிதொழுது
வாலைய தாகிய லோகிதனைப் பார்த்தீசர்
அருள்புரிந்து ஏது சொல்வார்

உத்தம னானஉன் தந்தையைப் போலவே
உலகமெல்லாம் நீயோர் குடைக்குள்
சத்திய வாக்குத் தவறாமல் அப்ப
சித்தம் மகிழ்ந்துமே வாழ்ந்தி ருப்பாய்

போசன் அரிச்சந்திர ராசனுக்குப்
பரமே சுவரர் எழுந்தருள் புரிந்து
வாசினை யாகவே அயோத்தி யாபுரி
வாழ்ந்து வெகுகாலந் தானிருக்க

மைந்தனுக்குப் பட்டங் கட்டி வைத்துந்தன்
மனதிலே நினையும்தான் நினைத்தால்
செந்திரு வாகிய சொர்க்கத்தி லேமனஞ்
சிந்தை மகிழ்ந்துன்னை வைப்பனென்றார்

வந்து வீர வாகு கடுமை யதாய்
சுடுகாடும் மயானமும் தான்காத்து
தந்திர மாகவே ராசரீகஞ் செய்யத்
தகுமோ யென்னை நகைப்பாரே

ஈனப் பறையனும் இல்லை பிள்ளாய்
இமதனம் ராசனுந்தா மும்பிள்ளையாய்
வானவர் இந்திரன் சபைதனிலே உந்தன்
மனதைச் சோதிக்க செய்ததுதான்

ஆதியே சுந்தர ஈசுவரரே தேவர்
அருகில் சொன்ன சபதந்தான்
நீதிய தாகவே வாதுக ளில்லாமல்
சோதி யெவர்க்கு மருள்புரிவீர்

இப்படியே ராச ரிருப்பதுண் டோமுனி
ஈசு வரரே புவியரசனே
சொல்படி வாக்குகள் இல்லை யென்று
ராசன் சொன்னாகாண் மாமுனியே

வாதுகள் பேசின மாமுனி யேகுரு
வசிஷ்டரே உந்தன் சிஷ்யருக்கு
ஏதேனு மானாலும் செய்தவசிலே
ஈந்து நீபாதி கொடுமெனவே

மந்திரத்தில் உபதேசம் அறிந்தபேர்
        வசிஷ்டரும் விசுவா மித்திரரும்
சிந்தை மகிழ்ந்தவர் செய்தவசில் பாதி
        சேகர மாகவே தான்கொடுத்தார்

தேவர்களைப் பார்த்து ஈசுவரரும் மனஞ்
        சிந்தை மகிழ்ந்து அருள்புரிவார்
காவலனை அரிச்சந் திரனுக்குப் பட்டங்
        கட்டிவைத்து வாங்க ளென்று சொல்லி
நாவலர் வந்து பணிந்திடவே
        செகதீசன் தானுங் கயிலைக் கேகினரே

இந்திரன் தேவர் முதலான ரிஷி
        ஈசுவரருங் குருமா முனியும்
காவல னானஅரிச் சந்திர ராசனும்
        சவாரி யதாக வருகின் றாரே

சாமரம் நின்றசைந் தாட விகட
        சங்கீத மேளங் கவிபாட
மாமறை யோர்கள் வேதஞ் சொல்ல
        ராசனும் வாழும் அயோத்திக்கி வந்தனரே

வையக மெல்லாம் பணிந்திடவே ரெத்தின
        மாணிக்க முடிதரித் திடவே
திட்டமுடன் ரெத்தின சிம்மாசனந்
        தன்னில் கொலுவி ருந்தார்

தாரை தவிலோடு நாகசரம் பம்பை
தம்பட்டம் கின்னரி தான்முழங்க
பாரினில் தருமவா னென்று சொல்லப்
புகழ்படைத்து மன்னவர் தான்வணங்க
ஆறினி லொன்று கடமை கொண்டு
அரிச்சந்திர ராசனுங் கொலுவிருந்தான்

வந்து அயோத்தி நகராளும்
மன்னன்அரிச் சந்திரன் வன்மைதன்னைச்
சிந்தை மகிழ்ந்து படிப்ப வர்க்கொரு
தீவினை வாராது தோழிப் பெண்ணே

நீதியாய் அரசாளு கின்றதுரை நீதான்
அரிச்சந்திரன் பார்த்து அதைக்
காதினில் கேட்டு மனமகிழ்ந் தார்க்கு
வந்த வினையோடும் தோழியரே

நீதிய தாகவே பாடும் புலவர்கள்
நிச்செய மாகவே வாழ்க வென்று
சோதி திருவாலங் காட்டைப் போற்றித்
தொழுது கும்மி யடியுங்கடி

பத்திய தாகவே அயோத்தி யாபுரி
பாரினிலே தருமந்தான் விளங்கும்
சத்திய வாக்கரிச் சந்திர ராசனை
நித்தியம் சோஸ்திரம் செய்யுங்கடி

எந்தன் குருவான சுப்பரா மய்யர்
　　இணையடி பாதம் சிரசில் வைத்து
செந்தமிழ் பாடின சின்னனந் தன்உடன்
　　சேர்ந்தகிளை அனைவரும் வாழ்கவென்று
மந்தையிலே கொலுவீத் திருக்கும் முத்து
　　மாரியைப் போற்றி அடிதொழுது
சிந்தனை யொன்றும் வாராமல் தினம்
　　சுந்தர ராசனைப் போற்றி செய்வேன்
ஆதர வாகிய விஞ்சையூர் மேவும்
　　அனுமந்த ராயன்சொல் செந்தமிழே.

☆ ☆ ☆ ☆

பின்னிணைப்பு

வகைப்பாடுகள்


கும்மிப்பாடல்
சமூகம்
சமயம்
வரலாறு
சீர்திருத்தம்
அறிவூட்டல்
நாட்டுப்பற்று
கதை
விளக்கவுரை
இந்து
கிருத்தவம்
இஸ்லாம்
வாழ்க்கை வரலாறு
நாட்டு வரலாறு
சிறப்பு நிகழ்ச்சிகள்
புராணம்
இதிகாசம்
தத்துவம்
சிறு தெய்வக் கதை
தெய்வத்துதி
தலபுராணம்
பொதுப்புராணம்
சமயம்
அரசியல்
சமூகம்
இராமாயணம் ... ... பாரதம்

அரிச்சந்திரன் கும்மி - முக்கியக் கதாபாத்திரங்கள்

அரிச்சந்திரன்	-	கோசல நாட்டு மன்னன், திரிசங்கு ராஜாவின் மகன்
சந்திரமதி	-	அரிச்சந்திரனுடைய மனைவி
வசிஷ்டர்	-	முனிவர்
விசுவாமித்திரர்	-	முனிவர்
நட்சத்திரன்	-	விசுவாமித்திரருடைய சீடன்
லோகிதன்	-	அரிச்சந்திரன் - சந்திரமதி தம்பதியரின் மகன்
சத்திய கீர்த்தி	-	அரிச்சந்திரனின் அமைச்சர்
காளகண்டய்யர்	-	சந்திரமதி, லோகிதனை விலைக்கு வாங்கியவர்.
வீரவாகு	-	அரிச்சந்திரனை அடிமையாகக் கொண்டவன்

அரிச்சந்திரன் கதைச் சுருக்கம்

திரிசங்குவின் மகனான அரிச்சந்திரன் கோசல நாட்டை அயோத்தியிலிருந்து ஆண்டு வந்தான். சந்திரமதியின் திருமணச் சுயம்வரத்தில் கலந்துகொள்ளக் கன்னோசி நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றான். சுயம்வர மண்டபத்திற்கு அழைத்துவரப்பெற்ற சந்திரமதியின் கழுத்தில் தாலியிருக்கக் கண்டு ஐயமுற்றான். சிவன் வரமளித்தபோது கூறிய "சந்திரமதியின் கணவனாகத் தக்கவன் கண்ணுக்கு மட்டுமே தாலி தோன்றும்" எனும் வாக்கை உரைத்து அரிச்சந்திரனின் ஐயத்தை மதிதய மன்னன் அகற்றினான். சந்திரமதி வீசிய மாலை அரிச்சந்திரன் கழுத்தில் விழ, திருமணம் நடந்தது. இருவருக்கும் லோகிதாசன் பிறந்தான். அவனுக்கு ஐந்து வயதானது.

அக்காலகட்டத்தில், புவியிலுள்ள மன்னர்களில் சத்தியநெறி தவறாதவன் யாரென இந்திரன் கேட்க, வசிட்டர் அரிச்சந்திரனைக் குறிப்பிட்டார். விசுவாமித்திரர் அதை மறுக்க, இருவருக்கும் வாக்குவாதம் எழுந்தது. வசிட்டர் தான் கூறியது தவறானால் தன் தவவேடத்தை நீக்கித் தலையில் கட்குடம் தூக்கித் தெற்குத்திசை செல்வதாகவும், விசுவாமித்திரர் தான் கூறியது தவறானால் தன் தவவலிமையில் பாதியை அரிச்சந்திரனுக்கு அளித்து விடுவதாகவும் பந்தயம் கூறினர்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனைச் சோதிக்க பூமி வந்தார். தான் செய்யும் யாகத்திற்காக அரிச்சந்திரனிடம் சென்று யானைமேல் இருந்து வலியோன் ஒருவன் வீசும் கவண்கல் சென்றுவிழும் தூரம்வரை பொன் வேண்டும் என்றார். அரிச்சந்திரன் அவ்வளவு பொன்னையும் வழங்கும் நேரத்தில் யாகம் தொடங்கும் நேரத்தில் வந்து பெற்றுக் கொள்வதாகக் கூறிச் சென்றார்.

அரிச்சந்திரனைத் துன்புறுத்தியேனும் பொய்சொல்ல வைக்கவேண்டும் என்னும் நோக்கத்தில் பல விலங்குகளை ஏவி அவனது நாட்டு வளத்தை அழிக்கச் செய்தார். அவ்விலங்குகளை அரிச்சந்திரன் அழித்தான். கொடிய பன்றியொன்றைப் படைத்தனுப்பினார். அதையும் அழித்தான்.

பின்னர், விசுவாமித்திரரின் கோபநெருப்பில் இரு அழகிய புலைப்பெண்கள் தோன்றினர். அவ்விரு பெண்களுக்குக் கலைகளனைத்தையும் கற்பித்து அரிச்சந்திரனிடம் சென்று கலைத்திறனைக் காட்டிப் பரிசாக அவனுடைய மகுடத்தைக் கேட்குமாறும் மறுத்தால் தங்களை மணக்கக் கேட்குமாறும் அதையும் மறுத்தால் தங்களுடன் ஒரு நாள் கூடிக் களிக்க வேண்டுமெனக் கேட்குமாறும் சொல்லியனுப்பினார்.

இருவரும் அவ்வாறே செய்ய, அனைத்தையும் மறுத்து அவர்களைக் காவலரை விட்டுத் தள்ளிவிட்டான் அரிச்சந்திரன். நடந்ததை அறிந்து சினங்கொண்ட முனிவர், அரிச்சந்திரனிடம் சென்றார். தன் பாதம் பணிந்த அரசனைக் காலால் உதைத்து, தான் அனுப்பிய விலங்குகளையும் பன்றியையும் இருபெண்களையும்

துன்பமுறச் செய்த குற்றத்தினைப் பொறுக்கமுடியாது என்றார். அவர் அனுப்பியவை என்று தெரிந்திருந்தால் துன்புறுத்தியிருக்க போவதில்லையென்றும், வந்த பெண்கள் தகாதனவற்றைக் கேட்டதால் துரத்த நேர்ந்தது என்றும் பணிவுடன் கூறினான்.

அவர்களிருவரையும் அவன் மணந்துகொண்டால் அவனுடைய குற்றங்களைப் பொறுத்துக்கொள்வதாகக் கூறினார். அவன் முடியாதென்றான்.

தன்மக்களைப் புலைப்பெண்கள் எனச் சொன்னதால் அரிச்சந்திரன் புலையனுக்கு அடிமையாகும்படி சாபம் தந்து, நாட்டை இழக்க நேரினும் சரி என்றதால் நாட்டைத் தானமாக அளித்துச் செல்லுமாறு கூறினார். அதனால், அவன் காட்டுக்குப் புறப்பட, முன்னர் யாகத்திற்காகக் கொடுத்து வைத்திருந்த பொன்னைத் தருமாறு கேட்டார். நாட்டை இழந்தமையால் அவன் தன்னிடம் பொன்னில்லை எனச் சொன்னான்.

அதுகேட்ட முனிவர், தாரைவார்த்துத் தருகையில் யாகத்திற்கான பொன் உட்பட எனச் சொல்லவில்லையே என்றும் முன் பொன்தருவதாகச் சொல்லவில்லையெனச் சொல்லிச் செல்லுமாறு உரைத்தார். அவனோ காசி நகர் சென்று நாற்பது நாளில் யாகத்துக்கான பொன்னை ஈட்டித் தருகிறேன் என்று கூறி மனைவி, மகன், அமைச்சருடன் சென்றான். அவர்களுடன் தனக்குரிய பொன்னைப் பெற்று வர நட்சத்திரன் என்பவரை முனிவர் அனுப்பினார். தான் உடன் வருவதற்காகத் தனியே பொன்னைக் கூலியாகத் தரவேண்டுமென நட்சத்திரன் கேட்டு மன்னனை ஒப்புக்கொள்ளச் செய்தான்.

முனிவருக்குப் பொன்தர காசி நகரில் சந்திரமதியை விலை கூறினான். அந்தணன் ஒருவனிடம் மனைவியையும் மகனையும் விற்று யானைமேலிருந்து கவண்கல் வீசியெறியும் தொலைவு அளவுக்குப் பொன்பெற்றுத் தந்தான். வீரவாகு என்ற புலையனுக்குத் தன்னை விற்று நட்சத்திரனுக்குக் கூலி கொடுத்தான். வீரவாகு சொற்படி மயானத்தைக் காவல் காத்தான்.

அந்தணனுக்கு அடிமையான சந்திரமதியும் அவள் மகனும் கடுமையாக வேலை செய்தனர். ஒரு நாள் தர்ப்பை கொய்யச் சென்ற லோகிதனைக் கருநாகம் தீண்ட அவன் அங்கேயே இறந்தான்.

மகன் இறந்ததைக் கேட்டுத் துடித்த சந்திரமதி அந்தணரிடம் மன்றாடி அனுமதிபெற்று மகனைத் தேடிக் கண்டுபிடித்து அழுதாள். மயானத்தில் அவனுடலை எரிக்க முயல, காவல் காக்கும் அரிச்சந்திரன் தடுத்தான். கால்பணம், ஆடை, வாய்க்கரிசி ஆகியவற்றைத் தந்தபின் எரிக்கச் சொன்னான். தன்னிடம் எதுவுமில்லையென அவள் கூற, கழுத்தில் இருக்கும் தாலியைச் சுட்டினான்.

கணவனைத் தவிர வேறெவருக்கும் புலப்படாத தாலி புலையன் கண்ணுக்குத் தெரிகிறதே என அவள் புலம்ப, அவள் சந்திரமதிதான் என உணர்கிறான் அரிச்சந்திரன். தன் மகனின் நிலையறிந்து அழுத அவன், தான் அடிமையான விதத்தைக் கூறினான்.

பிணஞ்சுடத் தரவேண்டிய கால்பணத்தையும் ஆடையையும் அவள் வேலை பார்க்கும் அந்தணரிடம்

வாங்கிவருமாறு கூறினான். சந்திரமதியும் மகனுடலை மயானத்தில் விட்டுச் சென்றாள். அவள் செல்லும் வழியில் விசுவாமித்திரர் ஏவிய மூவர் காசிமன்னன் மகனைக் கொன்று உடலைப் போட்டுச் சென்றனர். அவ்வுடலைப் பார்த்து சந்திரமதி தன் மகனோ என்றெண்ணிக் கையிலெடுத்தாள். காசிமன்னன் மகனைத் தேடிவந்த காவலர்கள் அவள்தான் காசிமன்னன் மகனைக் கொன்றவள் என முடிவு செய்து மன்னனிடம் கட்டியிழுத்துச் சென்றனர். அவள் கொன்றிருக்கமாட்டாளோ என்று மன்னன் ஐயுற்றாலும் சூழல் அவளைக் குற்றவாளியாக எண்ணச் செய்ய, அவன் அவையோரிடம் கருத்துகேட்டான். அங்குத் தோன்றிய விசுவாமித்திரர் அவள் தலையை வெட்டி தண்டனை அளிக்கவேண்டுமென்றார்.

காசிமன்னன் வீரவாகுவிடம் வாள்தந்து வெட்டுமாறு ஆணையிட்டான். வீரவாகு அப்பொறுப்பை அரிச்சந்திரனிடம் ஒப்படைத்தான். அப்பொழுதும், பொய் சொன்னால் காப்பதாக விசுவாமித்திரர் கூற, அவன் மறுத்து சந்திரமதியை வெட்ட வாளை ஓங்க, அது அவள் கழுத்தில் பூமாலையாக விழுந்தது.

சிவன், திருமால், பிரமன் முதலான தெய்வங்களும் தேவரும் வசிட்டரும் விசுவாமித்திரரும் அவனைப் புகழ்ந்துரைத்தனர். லோகிதனும் காசிமன்னன் மகனும் உயிர்பெற்று மீண்டனர். அனைவரும் வாழ்த்த அரிச்சந்திரன் மறுபடியும் அயோத்தி சென்று நீண்ட நெடுங்காலம் புகழுடன் வாழ்ந்துவந்தான்.

துணைநூற் பட்டியல்

1. இரங்கசாமி முதலியார், அ (பதி.), அரிச்சந்திரன் கும்மி, பூமகள் விலாசம் பிரஸ், சென்னை, 1935.

2. இராமசாமிப்புலவர், சு.அ, அரிச்சந்திர புராணம் (உரை நடை), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசிந்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1961.

3. சண்முகசுந்தரம், சு., தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995.

4. சரவணப்பெருமாள், அரிச்சந்திர புராணக் கும்மி, ஹமீதிய்யா பிரஸ், நாகப்பட்டணம், 1911.

5. சுப்பிரமணிய செட்டியார், அரிச்சந்திரன் கொம்மி, திருமகள் விலாச அச்சுக்கூடம், 1875.

6. சுப்பிரமணியன், ச.வே மற்றும் விஜயலட்சுமி, ர (பதி), தமிழ் இலக்கியக் கொள்கை 7, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1981.

7. நரசிம்மையர், அரிச்சந்திர மகாராஜன்பேரில் மனோன்மணிக்கும்மி, அருட்பிரகாச அச்சுக்கூடம், திருத்தொட்டிக்கலை, 1880.

8. பரந்தாமனார், அ.கி., கவிஞராக, பாரிநிலையம், சென்னை , 1975.

9. மணிகண்டன், ய (பதி), அரிச்சந்திரன் அம்மானை, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1995.

10. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக மூவருட தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை, தொகுதி - 12, பகுதி - 2, சென்னை, 1961.